Registered as a news paper

பக்கங்கள்: பன்னிரண்டு+II

விலை: ரூபா 8.00


நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்


அசல் 22 கரட் தங்கத்தில்
நவீன காலத்திற்கேற்ப
புதிய டிசைன்களில்
தங்க நகைகளை
செய்து பெற்றுக்கொள்ள
சிறந்த ஸ்தாபனம்
சிறி கருமாரி
நகையகம்
தங்கப்பவுண் நகை வியாபாரம்
205/6, கஸ்தூரியார் வீதி,
ராஜா தியேட்டர் கட்டிடம்,
யாழ்ப்பாணம். தொ:பே: 222 5385.

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2036 புரட்டாதி- 22 ஹிஜ்ரி 1428 ரம்ழான் 04 (08.10.2005) சனிக்கிழமை இதழ்:08

# தேர்தல் களத்தில் 13 வேட்பாளர்கள்!





கொழும்பு

எதிர்வரும் நவம்பர் 17ஆம் திகதி நடைபெறவுள்ள 5ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தலில் போட்டியிடுவதற்காக 13வேட்பாளர்கள் நேற்று ராஜகிரியிலுள்ள தேர்தல் செயலகத்தில் வேட்பு மனுத்தாக்கல் செய்தனர்.

நேற்றுக்காலை 9 மணிமுதல் 11 மணிவரை வேட்புமனுத்தாக்கல் செய்வதற்கென ஒதுக்கப்பட்டிருந்த நேரத்தில் இந்த வேட்பாளர்கள் தமது வேட்புமனுக்களைத் தாக்கல் செய்தனர்.

தேர்தலில் போட்டியிடுவதற்காக கட்டுப்பணம் செலுத்திய முஸ்லிம் தேசிய கூட்டமைப்பின் வேட்பாளரான செய்னுல் ஆப்தீன் நஸீர் அகமட்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானத்துக்கான நோபல் பரிசு!

ஒஸ்லோ



இவ்வருடத்திற்கான நோபல் சமாதான பரிசு ஐ.நா.சபையின் அணு சக்தி நிறுவனத்திற்கும், அதன் பணிப்பாளர் மொகமட் எல் பராடேக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

அணுவாயுதங்கள் பரப்பப்படுவதை கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டமைக்காக இந்த விருது (12 ஆம் பக்கம் பார்க்க)

## இயன்மாட்டின், ஹொவ்டே வியாழனன்று கிளிநொச்சிக்கு!

கொழும்பு

இலங்கைக்கு வருகைதர உள்ள நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் ட்றொண்ட் புறூவ் ஹொவ்டேயும் சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆலோசகருமான இயன் மார்ட்டினும் எதிர்வரும் வியாழக்கிழமை கிளிநொச்சியில் தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை சந்தித்துப் பேச்சுக்களை நடத்தவுள்ளனர்.

இருவருடனும் (12 ஆம் பக்கம் பார்க்க)

# அரசுக்கும் புலிகளுக்கும் இடையே உடனடிப் பேச்சு சாத்தியம் இல்லை!

## நோர்வே தூதரகம் அறிக்கை

கொழும்பு

இலங்கை அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே போர்நிறுத்த உடன்பாடு தொடர்பான பேச்சுக்களை உடனடியாக ஆரம்பிக்கக்கூடிய எந்தவித சாத்தியப்பாடும் இப்போது இல்லையென்று இலங்கைக்கான நோர்வே தூதரகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக நேற்று நோர்வே தூதரகம் வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

போர்நிறுத்த உடன்படிக்கையை அமுல்படுத்துவது தொடர்பாக இலங்கை அரசாங்கமும் விடுதலைப் (12 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.நகரில் நேற்றுக் காலை குடும்பஸ்தர் சுட்டுக் கொலை!

யாழ்ப்பாணம்

யாழ்.நகரப்பகுதியில் நேற்றுக்காலை இந்து கலாசார அலுவல்கள் அமைச்சு ஊழியர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

நேற்றுக்காலை 9 மணியளவில் ஆயர் இல்லத்திற்கு அண்மையாகவுள்ள பிரதானவீதி - கோவில் வீதிச் சந்தியில் இந்தச் சம்பவம் நடைபெற்றது.

இதில் கொழும்புத் துறையைச் சேர்ந்த கந்தசாமி செந்தில்குமார் (வயது-40) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது -

மேற்படி நபர் தனது பிள்ளைகளை பாடசாலைக்கு கொண்டு சென்று விட்டு உணவுப் பொருட்களை (12 ஆம் பக்கம் பார்க்க)

போர்நிறுத்த உடன்பாடு தொடர்பான பேச்சுக்களை உடனடியாக ஆரம்பிக்கக்கூடிய எந்தவித சாத்தியப்பாடும் இப்போது இல்லையென்று இலங்கைக்கான நோர்வே தூதரகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக நேற்று நோர்வே தூதரகம் வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

போர்நிறுத்த உடன்படிக்கையை அமுல்படுத்துவது தொடர்பாக இலங்கை அரசாங்கமும் விடுதலைப் (12 ஆம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணம் —

யாழ்.நகரப்பகுதியில் நேற்றுக்காலை இந்து கலாசார அலுவல்கள் அமைச்சு ஊழியர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

நேற்றுக்காலை 9 மணியளவில் ஆயர் இல்லத்திற்கு அண்மையாகவுள்ள பிரதானவீதி - கோவில் வீதிச் சந்தியில் இந்தச் சம்பவம் நடைபெற்றது.

இதில் கொழும்புத் துறையைச் சேர்ந்த கந்தசாமி செந்தில்குமார் (வயது-40) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது -

மேற்படி நபர் தனது பிள்ளைகளை பாடசாலைக்கு கொண்டு சென்று விட்டு உணவுப் பொருட்களை (12 ஆம் பக்கம் பார்க்க)

## வாழைச்சேனையில் தாக்குதல்; இருவர் பலி; எட்டுப் பேர் காயம்!

மட்டக்களப்பு —

மட்டக்களப்பு - வாழைச்சேனை விநாயகபுரத்தில் நேற்று இரவு 7 மணியளவில் இனந்தெரியாதோர் நடத்திய கைக்குண்டுவீச்சு மற்றும் துப்பாக்கிச் சூட்டில் 14 வயதுச் சிறுவன் உட்பட இருவர் கொல்லப்பட்டனர்.

மேலும் 8 பேர் காயமடைந்து வாழைச்சேனை மற்றும் மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

கொல்லப்பட்டவர்கள் அப்பகுதியைச் சேர்ந்த செல்வராஜா செல்வகுமார் (வயது14), ஆறுமுகம் பரமநாதன் (வயது 26) என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கொல்லப்பட்ட மற்றும் காயமடைந்தவர்கள் அனைவரும் கூலித்தொழிலாளிகள் என்றும், கடை ஒன்றின் முன்பாக நின்றுகொண்டிருந்தபோது அங்கு வந்த இனந்தெரியாத நபர்கள் இரண்டு கைக்குண்டுகளை வீசியும், ரி- 56 ரக துப்பாக்கியினால் சுட்டும்

(12 ஆம் பக்கம் பார்க்க)


## இந்தியப் பாதுகாப்பு அதிகாரிகள் இராணுவத் தளபதியுடன் சந்திப்பு

கொழும்பு —

மூவர்கொண்ட இந்திய பாதுகாப்பு உயரதிகாரிகள் குழுவொன்று கடந்த புதன்கிழமை இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சாந்த கொட்டேகொடவைச் சந்தித்து பேச்சுக்களை நடத்தியது.

இந்தியாவின் பாதுகாப்பு சேவைகள் அதிகாரிகள் கல்லூரியைச் சேர்ந்த இராணுவ, கடற்படை, விமானப்படை அதிகாரிகள் மூவரே நல்லெண்ண விஜயமாக கொழும்பு வந்திருந்தனர்.

இவர்கள் கடந்த புதன்கிழமை இராணுவத் தலைமையகத்தில் இராணுவத் தளபதி (12 ஆம் பக்கம் பார்க்க)



## கொழும்பில் பலத்த பாதுகாப்பு!



கொழும்பு —

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுத்தாக்கல் செய்யப்படும் நாளான நேற்று கொழும்பு நகரில் சுமார் ஏழாயிரம் படையினர் குவிக்கப்பட்டு பலத்த பாதுகாப்புப் போடப்பட்டிருந்தது.

ராஜகிரியவில் உள்ள தேர்தல் செயலகத்துக்கு வேட்புமனுத்தாக்கல் செய்ய செல்லும் வேட்பாளர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தப்படலாம் என்பதாலேயே பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது.

கொழும்பு நகருக்குள் வந்த ஆயிரத்துக்கும் அதிகமான வாகனங்கள் பாதுகாப்பு சோதனைகளின் பின்னரே அனுமதிக்கப்பட்டன.

ராஜகிரியப் பகுதிக்குச் செல்லும் வீதிகள் அனைத்தும் மூடப்பட்டிருந்ததாகவும், கொழும்பு நகரின் பல்வேறு வீதிகளும் மூடப்பட்டிருந்ததால் பொதுமக்கள் பெரிதும் சிரமங்களை எதிர்நோக்க நேரிட்டதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

## தேர்தலில் வெற்றி பெற்றால் தேசிய அரசு அமைக்கப்படும்!



ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு —


எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றால், சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஆதரவுடன் தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்க முயற்சி செய்யப்போவதாக ஐ.தே.கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நேற்று தேர்தல் திணைக்களத்தில் வேட்புமனுத்தாக்கல் செய்த பின்னர் ஊடகவியலாளரிடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்–

தேசிய நெருக்கடி உட்பட பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு இது கடைசிச் சந்தர்ப்பம் என்பதனை தென்பகுதி அரசியல்வாதிகள் உணர்ந்து கொள்ளவேண்டும்.

எனவே, இந்த (12 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 24 ஆவது பட்டமளிப்பு விழா நிகழ்வுகள்



யாழ்.பல்கலைக்கழகத்தின் 24 ஆவது பட்டமளிப்பு விழாவின் இறுதி நாள் நிகழ்வு நேற்று யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது. முதல் நாள் நிகழ்வுகள் ஐந்து அமர்வுகளாகவும், இரண்டாம் நாள் நிகழ்வுகள் ஐந்து அமர்வு களாகவும் நடைபெற்றன.

நேற்று முன்தினம் இடம்பெற்ற பட்டமளிப்பு முதல் அமர்வில் - கௌரவ கலாநிதி - 1, கலாநிதி -1, கலை மாணி - 230, இரண்டாவது அமர்வில் - கௌரவ கலாநிதி -1, கலைமாணி -230, மூன்றாவது அமர்வில் -கலாநிதி -1, கலை மாணி - 230, நான்காவது அமர்வில் -நுண் கலைமாணி -172, இசைகலைமாணி -2, விவசாய விஞ்ஞானமாணி -49, ஐந் தாவது அமர்வில் -கௌரவ கலாநிதி -1, வணிகமாணி -139 பேருக்கும்,

நேற்று நடைபெற்ற இறுதி 5 அமர்வுகளிலும் -

ஆறாவது அமர்வு - கௌரவ கலாநிதி - 1, எம்.பி.பி.எஸ் - 139, சித்த மருத்துவ சத்திர சிகிச்சை மாணி(பி.எஸ்.எம்.எஸ்) - 27, முது கலைமாணி (எம்.ஏ) - 11, முதுமெய்யியல்மாணி - 26, ஏழாவது அமர்வில் - கௌரவ கலாநிதி - 1, விஞ்ஞானமாணி - 170, எட்டாவது அமர்வில் -கௌரவ கலாநிதி - 1, தொழில் நிர்வாகமாணி - 198, ஒன்பதாவது அமர்வில் முது கல்வியியல் மாணி - 110, விஞ்ஞான மாணியும் வியாபார நிர்வாக மாணியும் - 126 (வவுனியா வளாகம்) பத்தாவது அமர்வு (சான்றிதழ்) - இசை கலை மாணி - 2, விஞ் ஞான தகைமை - 2, ஆங்கிலத்தில் தகைமை - 18, உடற்கல்வி யியல் தகைமை - 5, மருத்துவ ஆய்வுகூட தகைமை - 34 பேருக்கும் பட்டங்கள் வழங்கப்பட்டன.

## நெதர்லாந்து தூதுவர் யாழ்ப்பாணம் வருகிறார்!

யாழ்ப்பாணம்

இலங்கைக்கான நெதர்லாந்து தூதுவர் எதிர்வரும் 10, 11 ஆம் திகதி களில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளார். இவர் தனது விஜயத் தின் போது நெதர்லாந்து அரசின் நிதி யுதவியுடன்நிகொட் திட்டத்தினால்சமநல சேவை நிலையங்களுக்கு வழங்கப் பட்ட விவசாய உபகரணங்களை யும், யாழ்.மாவட்ட பாடசாலைக்கு வழங்கப்பட்ட தளபாடங்களையும் பார் வையிடும்முகமாகசிலவிவசாயகேந்திர நிலையங்கள், மற்றும் பாடசாலை என் பவற்றிற்கு விஜயம் செய்யவுள்ளார்.

அத்துடன், யாழ். மாநகர சபைக்கு உழவுஇயந்திரங்களையும் வழங்க வுள்ளார். உழவுஇயந்திரங்கள் யாழ். மாநகரசபை ஆணையாளரிடம் கைய ளிக்கும் நிகழ்வு நாளை மறுதினம் பி.ப 3.30 மணிக்கு மாவட்ட செயல கத்தில் நடைபெறும் .

## நவராத்திரி விழா

சங்கானை

சங்கானை மாவடி ஞானவைர வர் ஆலய நவராத்திரி பூஜை விழா கடந்த செவ்வாய் முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. எதிர்வரும் 12 ஆம் திகதி விஜயதசமி நடைபெறவுள் ளது. அன்றைய தினம் சுவாமி வீதி உலா மற்றும் வாழை வெட்டுதல் நிகழ்வு நடைபெறவுள்ளது. அத்துடன் சிறார்களுக்கான வித்தியாரம்பமும் இடம்பெறவுள்ளதாக ஆலய பரிபால சபையினர் தெரிவிக்கின்றனர். (48)

## சிறப்பு நிகழ்வு

யாழ்.பல்கலைக்கழகத்தின் 24 ஆவது பட்டமளிப்பு விழாவையொட்டி இராமநாதன் நுண்கலைக்கழக இசைத்துறை, நடனத்துறை மாண வர்களின் சிறப்பு கலைநிகழ்வு இன்று மாலை 3 மணிக்கு பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடை பெறவுள்ளது.

பட்டமளிப்பு விழா குழுத் தலைவ ரும், கலைப்பீடாதிபதியுமான பேரா சிரியர் சிவச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் - பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் எம்.சிவசூரியா, திருமதி சிவசூரியா ஆகியோர் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளனர்.

## வல்லிபுர ஆழ்வார் பாமாலை ஒலிநாடா வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்

யாழ்.கல்விவலய ஊழியர் நலன் புரி சங்கத்தின் ஆதரவுடன் வல்லிபுர ஆழ்வார் பக்திமாலை ஒலிநாடா வெளியீட்டு விழா இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி தம்பர் மண்டபத்தில் நடைபெறவுள் ளது.

யாழ்.வலய பிரதிக் கல்விப் பணிப் பாளர் யோ.ரவீந்திரன் தலைமை யில் நடைபெறும் இந்த நிகழ்வில் - வெளியீட்டுரையை வலம்புரி ஆசிரி யர் ந.விஜயசுந்தரம் நிகழ்த்துவார்.

யாழ்.வலய பிரதிக் கல்விப் பணிப் பாளரும், பாமாலை ஆசிரியருமான நா.வரதராசா, இசையமைப்பாளர், இசைக் கலாமணி ந.செல்வச்சந்தி ரன் ஆகியோர் ஏற்புரை நிகழ்த்துவர்.

## நாவற்குழிப் பகுதியில் பற்றைகள் வெட்டப்படுகிறது

யழ்ப்பாணம்

வீதி அபிவிருத்தி அதிகார சபை யால் நாவற்குழி பாலத்தை அண்டிய ஏ9 வீதியில் - வீதி துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஏ9 வீதியின் இருமருங்கிலும் போக்குவரத்துக்கு இடையூறாக காணப்பட்ட பற்றைகள், செடிகள் என் பன வீதி அபிவிருத்தி அதிகாரசபை யின் ஊழியர்களால் அகற்றப்படுகின் றன.

நாவற்குழி பால புனரமைப்பு பணிகள் இடம்பெற்ற வேளை போக்கு வரத்துச் சேவைகள் இந்த வீதியூடாக நடைபெறாதநிலையில் இந்த வீதிப் பகுதியின் இருமருங்கிலும் பற்றை கள், செடிகள் வளர்ந்து காணப்பட் டன.

தற்போது பால புனரமைப்பு வேலைகள் முடிவடைந்து மீள போக்குவரத்து சேவைகள் இடம்பெறுவ தால், இந்தப் பற்றைகள், செடிகள் போக்குவரத்துக்கு இடையூறாக இருப்பதால், இவற்றை வீதி அபி விருத்தி அதிகார சபை அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

அத்துடன், யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட அரியாலை, சுண் டுக்குழி ஆகிய பகுதிகளிலும், ஏ9 வீதி யிலும் வீதி அபிவிருத்தி அதிகார சபை யால் வீதி துப்பரவுப் பணிகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

## உதைபந்தாட்டப் போட்டி

வடமராட்சி

வடமராட்சி வலயமட்ட பாட சாலைகளுக்கிடையேயான உதை பந்தாட்டச் சுற்றுப்போட்டி வதிரி டயமன்ஸ் மைதானத்தில் இன்று பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகவுள் ளது.

இதில் 16 வயது ஏ.பிரிவில் வல் வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி அணியை எதிர்த்து உடுப்பிட்டி அமெ ரிக்கன் மிசன் பாடசாலை அணியும், சி பிரிவில் கொற்றாவத்தை பாடசா லை அணியை எதிர்த்து தொண்டம னாறு வீரகத்திப்பிள்ளையார் வித்தி யாலய அணியும் மோதவுள்ளன.

அணிகளை உரிய நேரத்திற்கு சமுகம் தருமாறு வடமாரட்சி வலய உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப் பாளர் வி.வல்லிபுரம் கேட்டுள்ளார். (12)

## இளங்கலைஞர் மன்றத்தின் மூன்று நாள் வாணி விழா

யாழ்ப்பாணம்

நல்லூர் இளங் கலைஞர் மன்றம் நடத்தும் வாணி விழா இன்று மாலை 5.30 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து மூன்று தினங்கள் நடைபெறவுள்ளது.

முதல் நாள் நிகழ்வில் ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி இ.ஏகநாதன் பிரதம விருந்தினராக கலந்துகொள்ள வுள்ளார்.

இரண்டாம் நாள் நிகழ்வில் மக் கள் வங்கியின் பிராந்திய முகாமை யாளர் துரைசிங்கம் ரகு பிரதமவிருந்தி னராகவும், மூன்றாம் நாள் நிகழ்வில் யாழ்.மாநகர சபை ஆணையாளர் சி.வி.கே.சிவஞானம் பிரம விருந் தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

வாணி விழா நிகழ்வு நடை பெறும் மூன்று தினங்களும் மங்கள இசை, இசைக்கச்சேரி, நாட்டியாஞ் சலி, வீணை இசை, வயலின் கச் சேரி, நாட்டிய நாடகம் போன்ற பல நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

## வாணி விழா

சங்கானை

சித்தங்கேணி மாதர் கிராம அபி விருத்திச் சங்கம், சனசமூக நிலையம், பாலர் வகுப்பு என்பன இணைந்து நடத்தும் வாணி விழா நாளை மறு தினம் திங்கட்கிழமை பி.ப 2 மணிக்கு தலைவர் திருமதி கோமளவல்லி தங்கராஜா தலைமையில் சங்க மண்ட பத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி சங்க மண்டபத்தில் நடை பெறும் இவ்விழாவின் பூஜை ஆராத னைகளை சிவஸ்ரீசபா வாசுதேவக் குருக்கள் நடத்தவுள்ளார். (48)

## திரைப்படக் காட்சி

யாழ்ப்பாணம்

திருமறைக்கலாமன்றம் தெரிதல் வட்டத்துடன் இணைந்து நடத்தவுள்ள திரைப்படக்காட்சி இன்று மாலை 7 மணிக்கு மன்ற அரங்கில் இடம்பெற வுள்ளது.

தமிழ்த் துணைத் தலைப்புகளு டன் ரஷ்ய மொழித் திரைப்படமான 'வரிஷா' காட்சிப்படுத்தப்படவுள்ளது. இதன் தொடர்ச்சியாக மாதாந்தம் திரைப்படக் காட்சி இடம்பெறுவதுடன், கருத்துப் பரிமாற்றங்களும் நடை பெறுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


சுன்னாகம் நாகம்ஸ்

ஜெயம் ரவி,கலாபவன் மணி, வடிவேல் மற்றும் பலர் நடித்த

மழை



காட்சிகள்:-11.00,3.00,7.00,10.00 (பழையநேரம்)

சிறு விளம்பரம்

விற்பனைக்கு

பிஸ்கட் தயாரிப்பதற்கான பிஸ்கட் அச்சு, மா குழைக்கும் இயந்திரம், மின்சாரத்தில் இயங் கும் பெரிய அவண் மற்றும் காலால் இயக்கும் பொலித்தீன் சீலர் என் பன விற்பனைக்குண்டு.

தொடர்பு -தி.கிருஷ்ணராசா, 190, சிவன் பண்ணை வீதி, யாழ்ப் பாணம். T.P:- 0777112918 (2075)

தவறிவிட்டது

சிவஞானம் செந்தூரன் ஆகிய நான் எனது தேசிய அடையாள அட்டை (822311636 v), விசேட அடையாள அட்டை, சாரதி அனு மதிப் பத்திரம் மற்றும் சிறு தொகைப் பணத்துடன் பேர்ஸ் ஒன்று அளவெட்டிக்கும் மருதனார் மடத்துக்குமிடையில் தவறிவிட் டது.

கண்டெடுத்தவர்கள் சி.செந் தூரன், அருளானை, பன்னாலை, தெல்லிப்பழை, எனும் முகவரிக்கோ அல்லது 0779004003 எனும் இலக்கத்துடனோ தொடர்பு கொள் ளவும். (2080)

நிறைஞ்சனாஸ் சங்கானை

ரவிகிருஷ்ணா, கோபிகா, பிரகாஷ்ராஜ்,ரேவதி மற்றும் பலர்நடித்த

பொன்னியின் செல்வன்

காட்சிகள் 11.00, 2.45, 6.00 (புதிய நேரம்)

நாதன்ஸ் யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)

சரத்குமார், வைகைப்புயல் வடிவேலு, நமீதா நடித்த

சாணக்யா



காட்சிகள்:-10.30, 2.30,6.30, 9.30 (புதிய நேரம்)

ராஜா யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு சூர்யா, அஸின், நயன்தாரா, பிரகாஸ்ராஜ் நடித்த

கஜினி



ரிக்கற் முற்பதிவு செய்து கொள்ளலாம்

காட்சிகள்:-10.30,2.30, 6.30, 9.30 (ப.நேரம்)

மனோகரா யாழ்ப்பாணம்

இளைய தளபதி விஜய், ஜோதிகா, விவேக் நடித்த

திருமலை

11.10.05 முதல் -

பார்த்தீபன், லட்சுமிராஸ், வடிவேல் நடித்த

குண்டக்க மண்டக்க...

காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 5.30, 9.30

"வாசியுங்கள் அகவிழி திறக்கும்"

விசேட விலைக் குறைப்பில் புத்தகங்கள்

இம்மாதம் 31 ஆம் திகதி வரை

ஆசிரியர்களுக்கான மாத இதழ்

அகவிழி

ஆசிரியத்துவ நோக்கு...

AHAVILI, 3, Torrington Avenue, Colombo-7, Sri Lanka. Tel : 011-2506272 E-mail : ahavili@viluthu.org

BOOK LAB

பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

(C/4683)

பாராட்டி வாழ்த்துகிறோம்



யாழ்.பல்கலைக்கழகத்தில் வணிக மாணிப்பட்டம் (2 nd Upper) பெற்ற

செல்வி

ஷியாளினி தருமராசா

அவர்களைப் பாராட்டுவதோடு, மேலும் பல பட்டங்கள் பெறவேண்டுமென மன தார வாழ்த்துகின்றோம்.

ஏழாலை தெற்கு, களபாவோடை

(சி /4700)

குடும்பத்தினர்

03.10.2005 முதல் 01.11.2005 வரை

தீபாவளி மலிவு விற்பனை

நீங்கள் வாங்கும் பொருள்களுக்கும்

விசேட கழிவு!

உடனே விஜயம் செய்யுங்கள்

லைடன் புடவை நிலையம்



இல: 410 , ஆஸ்பத்திரி வீதி, (பஸ் நிலையம் முன்பாக) யாழ்ப்பாணம். (C/4689)

T.P: 222 2381

# சிறைச்சாலைகள் ஆணையாளர் நேற்று திருமலைக்கு விஜயம்!

கொழும்பு —


சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் நேற்று திருகோணமலைக்கு விஜயம் செய்தார்.


விசேட விமானம் ஒன்றின் மூலம் திருகோணமலைக்கு நேற்றுக்காலை சென்றடைந்த சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் ரூமி மர்ஷுக், திருகோணமலை சிறைச்சாலைக்கு சென்றார். திருமலை சிறைக்காவலர்கள் கடந்த புதன்கிழமை பாதுகாப்பு, ஆளணிப் பற்றாக்குறை தொடர்பாகவும் கைதிகளை நீதிமன்றங்களுக்கு ஏற்றிச் செல்வதற்கான வாகன வசதிகள் செய்துகொடுக் கப்படவேண்டும் எனவும் பல கோரிக்கைகளை முன்வைத்து பகிஷ்கரிப்பு ஒன்றில் ஈடுபட்டிருந்தனர். இவர்களின் கோரிக்கைகள் குறித்து ஆராயும் நோக்கிலேயே ரூமி மர்ஷுக் இந்த விஜயத்தை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திருமலை சிறைக்காவலர்களின் குறைகளைக் கேட்டறிந்த சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் ஏற்கனவே இடமாற்றம் செய்யப்படவிருந்த ஆறு சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் இடமாற்றங்களை ரத்துச்செய்யுமாறும் உத்தரவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, கடந்த 4 ஆம் திகதி மூதூர் பகுதியில் கைதிகள் கடத்தப்பட்ட சம்பவத்தில் ஆயுததாரிகளின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான சுகுண குமார் என்ற சிறைச்சாலை உத்தியோகத்தரையும் ஆணையாளர் நாயகம் வைத்தியசாலைக்கு சென்று பார்வையிட்டார். (01,04)

# மனோ கணேசனும் ரணிலுக்கு ஆதரவு!





கொழும்பு —

ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்க மேல் மாகாண மக்கள் முன்னணி முடிவுசெய்துள்ளது.


கொழும்பில் ஊடகவியலாளர்களிடம் மேல் மாகாண மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

ஊடகவியலாளர்களிடம் பேசிய மனோ கணேசன் -

நாட்டின் அனைத்துப் பிரச்சினைகளும் இனப்பிரச்சினையை மையமாகக் கொண்டதாக இருக்கிறது. இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டால் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்பட்டுவிடும். இனப்பிரச்சினைக்கு மஹிந்த ராஜபக்ஷ தீர்வு காண்பார் என்பதை அவரது செயற்பாடுகள் நிரூபிக்கவில்லை. எனவே ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரிக்க முடிவு செய்துள்ளோம்.

சிறுபான்மை இனங்களின் வாக்குகள் ஜனாதிபதித் தேர்தலின் வெற்றியைத் தீர்மானிக்காது என்று பிரதியமைச்சர் சிறிபதி சூரியாராச்சி தெரிவித்துள்ளதற்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

# வெற்றிலை சின்னத்திலேயே பிரதமர் மஹிந்த போட்டி!



கொழும்பு —

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான மஹிந்த ராஜபக்ஷ, எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளராகவே போட்டியிடவுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் அவர் வெற்றிலைச் சின்னத்தின் கீழ் வேட்புமனு தாக்கல் செய்யவுள்ளார். மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் விஞ்ஞாபனம் தயாரிப்பதிலும் தொடர்ந்தும் தாமதம் ஏற்படும் சூழ்நிலை எழுந்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தற்சமயம் வெளிநாடு சென்றிருக்கும் ஜனாதிபதி நாடு திரும்பியதும், இது தொடர்பாக தீர்மானம் மேற்கொள்ளப்படுமென சிறிலங்கா சுதந்திர கட்சி தரப்புகள் தெரிவித்துள்ளன. (01)

# விமானத்தில் சுகவீனமுற்ற பெண் வைத்தியசாலையில் மரணம்

கொழும்பு —

சவுதி அரேபியாவிலிருந்து இந்தோனேஷியாவுக்கு சென்றுகொண்டிருந்த விமானமொன்று திடீரென நேற்றுமுன்தினம் கட்டுநாயக்க விமானநிலையத்தில் தரையிறக்கப்பட்டது.

விமானத்தில் பயணித்த பெண்ணொருவர் சுகயீனமுற்றதன் காரணமாகவே விமானம் தரையிறக்கப்பட்டது. இந்தப் பெண் நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதும் சிகிச்சை பலனளிக்காத நிலையில் மரணமடைந்தார். மரணமடைந்தவர் 52 வயதானவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# பாதிக்கப்பட்ட அனைவருக்கும் ஐயாயிரம் ரூபா கொடுப்பனவு!

கொழும்பு —

நிதியமைச்சின் விசேட சுற்றறிக்கை மூலம் இடைநிறுத்தப்பட்டிருந்த 5000 ரூபா கொடுப்பனவை - சுனாமியால் இடம்பெயர்ந்த அனைவருக்கும் வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் ஆலோசனைக்கமைய நிதியமைச்சின் செயலாளர் பி.பி.சுந்தரவுடன் நடைபெற்ற கலந்துரையாடலில் மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டதாக சமூக நலன்புரி மற்றும் மகளிர் அபிவிருத்திக்கான பிரதியமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார்.

இந்த 5000 ரூபா கொடுப்பனவைப் பெறுவதில் நெருக்கடி ஏதும் ஏற்படுமாயின் சமூக சேவைகள் பிரதி அமைச்சர் அலுவலகம், செத்சிறிபாய, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு பொதுமக்கள் அறிவிக்கலாமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (தே)

# 13.3 மில்லியன் மக்கள் வாக்களிக்க தகுதி

கொழும்பு —

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் 13.3மில்லியன் மக்கள் வாக்களிப்பதற்கான பதிவை மேற்கொண்டுள்ளதாக பவ்ரல் அமைப்பின் தலைவர் கிங்ஸ்லி றொட்றிக்கோ தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலுடன் ஒப்பிடுகையில் தற்போது நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் வன்செயல்கள் அதிகரிக்கலாமெனவும் அவர் அச்சம் தெரிவித்துள்ளார்.

# பிரதமர் மஹிந்தவுக்கு றொனி டி மெல் ஆதரவு!

கொழும்பு —

இலங்கையில் நீண்ட காலமாக நிதியமைச்சராக இருந்த றொனி டிமெல் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பிரதமர் மஹிந்த ராஜபக்சவுக்கு தனது ஆதரவைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கருத்துத் தெரிவிக்கையில் - பொருளாதார ரீதியாக எவ்வித ஆலோசனைகளையும் பிரதமருக்கு வழங்குவதற்கு மிகவும் விருப்புடையவனாக உள்ளேன். நாம் எமது சந்தை வாய்ப்புக்களை மேலும் தாராள மயப்படுத்துவதுடன் எமது தொழிற்சாலைகள் மற்றும் நுகர்வோரையும் பாதுகாக்க வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

# விமல் வீரவன்சவுக்கு எதிரான மனு நாளை மறுதினம் விசாரணைக்கு!

கொழும்பு —

மக்கள் விடுதலை முன்னணியின் பிரசார செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்சவை கைது செய்து, நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு பொலிஸ்மா அதிபருக்கு கட்டளையிடுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணை நாளை மறுதினம் நடைபெறவுள்ளதாக மேன் முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் அன்ட்ரூ சோமவன்ச தெரிவித்தார்.

அரச சார்பற்ற அமைப்பு ஒன்றின் இயக்குநரான கலாநிதி குமார் ரூபசிங்க இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுவில் பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ, நாடாளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ச, ரில்வின் சில்வா ஆகியோரும் மக்கள் விடுதலை முன்னணி கட்சியும், சட்டமா அதிபரும் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

# ஊடகவியலாளர்கள் ஐம்பது பேர் இன்று திருமலை செல்லவுள்ளனர்

கொழும்பு —

தேசிய சமாதான பேரவையின் அனுசரணையுடன் தென்னிலங்கையில் இருந்து 50 ஊடகவியலாளர்கள் திருகோணமலைக்கு செல்லவுள்ளனர். இன்று தொடக்கம் 11 ஆம் திகதி வரை அவர்கள் பல்வேறு வேலைத்திட்டங்களில் ஈடுபடுகின்றனர்.

திருகோணமலைக்கு வரும் இவர்கள் - பிரதேச தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகள், பாடசாலைகளின் அதிபர்கள், சமூக பிரமுகர்கள், உள்ளூர் செய்தியாளர்கள், படை அலுவலர்கள், பொலிஸ் ஆகியோரைச் சந்திக்கவுள்ளனர். விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கும் செல்வதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இன்று தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரை வள்ளுவர் நிலையத்தில் சந்தித்து அவர்களின் வேலைத்திட்டங்கள் பற்றியும், தற்கால நடைமுறைகள் பற்றியும் அறியவுள்ளனர்.

நாளை பிற்பகல் 2 மணிக்கு சிவானந்த தபோவனத்தில் வைத்து பாடசாலை அதிபர்களையும், பொலிஸாரையும், சந்திப்பதுடன் உள்ளூர் செய்தியாளர்களுடனான கலந்துரையாடலையும் மேற்கொள்ளவுள்ளனர். இந்த நிகழ்வை திருகோணமலை மாவட்ட இளைஞர் அபிவிருத்தி அகத்தினர் ஏற்பாடு செய்துள்ளனர்.

# முகமாலையில் மட்டும் 103 வாக்குச் சாவடிகள்!

யாழ்ப்பாணம் —

யாழ்.மாவட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியைச் சேர்ந்த மக்கள், ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்காக முகமாலை இராணுவ சோதனைச் சாவடியில் வாக்குச் சாவடிகள் அமைக்கப்படும் என, யாழ். மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் வி.குகநாதன் தெரிவித்தார்.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி வாக்காளர்கள், வாக்களிக்க வசதியாக முகமாலையில் 103 வாக்குச் சாவடிகள் அமைக்கப்படும். இதில் 95 வாக்குச் சாவடிகள் கிளிநொச்சி மாவட்ட வாக்காளர்களுக்காகவும், எட்டு வாக்குச் சாவடிகள் வடமராட்சி வாக்காளர்களுக்காகவும் அமைக்கப்படவுள்ளன.

கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய நிர்வாக மாவட்டங்களை உள்ளடக்கிய யாழ். தேர்தல் மாவட்டத்தில் மொத்தமாக 624 வாக்குச் சாவடிகள் அமைக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (01)

# இ.தொ.காவும், முஸ்லிம் காங்கிரசும் தவறு செய்துவிட்டன என்கிறார் மங்கள!



கொழும்பு —

பொதுத்தேர்தலின்போது இலங்கை தோட்டத் தொழிலாளர் காங்கிரசும் - சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசும் மேற்கொண்ட அதே தவறை இப்போது மீண்டும் செய்துள்ளன என்று அமைச்சர் மங்கள சமரவீர குற்றம்சாட்டியுள்ளார்.

ஆளும் கட்சி வேட்பாளரின் தேர்தல் ஒருங்கிணைப்பாளரான மங்கள சமரவீர இது குறித்து மேலும் கூறுகையில் -

எனது அருமை நண்பர் ஆறுமுகம் தொண்டமான் அரசியல் தற்கொலை செய்துகொள்கிறார் என்று கூறியிருந்தேன். அதுதான் அவரது வாழ்க்கையாகிவிட்டது. ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின் வரலாற்றின் குப்பைத் தொட்டியில் அவர் வீசியெறியப்படுவார்.

நாடாளுமன்றில் இ.தொ.கா தனித்து செயற்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தாலும், தோட்டத் தொழிலாளர்கள் மஹிந்த ராஜபக்ஷவைத்தான் ஆதரிக்கப்போகிறார்கள் என அவர் மேலும் கூறினார்.

# பெண்ணை கடத்தியோரை கைதுசெய்ய விசாரணை!

கொழும்பு —

பெண்ணொருவரைக் கடத்திச் சென்று 15 லட்சம் ரூபா பணத்தைக் கொள்ளையிட்ட சம்பவம் தொடர்பாக, புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்த பிரதி அமைச்சர் ஒருவரையும், அவரது 4 ஆதரவாளர்களையும் கைது செய்வதற்கான விசாரணைகள் நடைபெற்று வருவதாக வென்னப்புவ பொலிஸார் தெரிவித்தனர்.

வென்னப்புவ தும்மல தெனியப்பகுதியில் இந்தக் கடத்தல் மற்றும் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

# நூற்றுக்கணக்கான புலிகள் வாழைச்சேனையில் நடமாட்டம்!

## படைத்தரப்பு தெரிவிப்பு

கொழும்பு —

மட்டக்களப்பு - பொலனறுவ பிரதான வீதிக்கு அருகில் பல நூற்றுக்கணக்கான புலி இயக்க உறுப்பினர்கள் ஆயுதங்களுடன் நடமாடியதாக படைத்தரப்பு தெரிவிக்கிறது.

வாழைச்சேனைக்கு மேற்கே, இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியான வாகனேரிப் பகுதியிலேயே கடந்த புதன்கிழமை மாலை 5.45 மணியளவில் புலிகளின் நடமாட்டம் அவதானிக்கப்பட்டதாக படையினர் தெரிவித்தனர். படையினரின் பிரதான விநியோகப் பாதைக்கு அருகாக காவற்பணிகளில் ஈடுபட்ட இவர்கள் பின்னர் அங்கிருந்து விலகிச் சென்றதாகவும் படைத்தரப்பு தெரிவித்தது.

# உலக லெவன் அணியைத் தோற்கடித்து தொடரைக் கைப்பற்றியது அவுஸ்ரேலியா!













மெல்போர்ன் —

மெல்போர்னில் நேற்று நடைபெற்ற இரண்டாவது ஒருநாள் போட்டியிலும் உலக லெவன் அணியைத் தோற்கடித்த அவுஸ்ரேலிய அணி - சுப்பர் சீரிஸ் தொடரை 2-0 என்ற அடிப்படையில் கைப்பற்றியது.

அவுஸ்ரேலிய அணி நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாட முடிவு செய்தது. தொடக்க வீரர்களாக கில்கிறிஸ்ட்டும் கடிச்சும் களமிறங்கினர்.

அதிரடி ஆட்டம் போடும் திட்டத்துடன் இறங்கியதுபோல கில்கிறிஸ்ட் உலக அணி வீரர்களின் பந்துகளை விளாசித் தள்ளினார். பவுண்டரிகளும், சிக்ஸர்களுமாக மைதானம் களைகட்டியிருந்தது.

மறுபுறத்தில் கடிச், நிதானமாக நின்றுபிடித்து ஆடினார். அவுஸ்ரேலிய அணியின் ஸ்கோர் 110ஐ எட்டும்வரை உலக அணி வீரர்களின் பந்துவீச்சு எடுபடவில்லை.

கடைசியாக முரளிதரனின் பந்துவீச்சில் முதலாவது விக்கெட்டாக கடிச்சை இழந்தது அவுஸ்ரேலிய அணி. போல்டாகி வெளியேறிய கடிச் 71 பந்துகளை எதிர்கொண்டு 3 பவுண்டரிகளுடன் 47 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து கில்கிறிஸ்டுடன் பொண்டிங் இணைந்து கொண்டார். இருவருமே நிதானமாகவும், வேகமாகவும் ஓட்டங்களைக் குவிக்க ஆரம்பித்தனர்.

கில்கிறிஸ்ட் அதிக வேகத்துடன் அரைச் சதத்தைக் கடந்தது போன்று சதத்தையும் கடந்தார். ஸ்கோர் 173ஆக இருந்தபோது எதிர்பாராத விதமாக ஷேவாக்கின் பந்துவீச்சுக்கு போல்டாகி வெளியேற நேரிட்டது.

இவர் 79 பந்துகளில் 8 பவுண்டரிகள், 4 சிக்ஸர்களுடன் 103 ஓட்டங்களைக் குவித்தார். இவரைத் தொடர்ந்து பொண்டிங்குடன் மார்ட்டின் இணைந்து கொண்டார்.

அவரும் அதிரடி ஆட்டத்தைத் தொடங்கினார். இதனால், ஸ்கோர் உயர்ந்து 276ஐ எட்டியது. இந்தநிலையில், பொண்டிங் ரன் அவுட்டாக நேரிட்டது. இவர் 72 பந்துகளில் 4 பவுண்டரிகளுடன் 66 ஓட்டங்களை எடுத்திருந்தார். அதே வேளை, அதே ஸ்கோரில் அடுத்த பந்திலேயே மார்ட்டினும் பவிலியன் திரும்பநேரிட்டது.

JOHNNIE WALKER SUPER SERIES AUSTRALIA 2005

பிளின்ரொப்பின் பந்துவீச்சில் போல்டாகி வெளியேறிய இவர் 54 பந்துகளை எதிர்கொண்டு 5 பவுண்டரிகளுடன் 54 ஓட்டங்களை அணிக்காகப் பெற்றுக் கொடுத்தார்.

தொடர்ந்துவந்த சைமன்ஸ் - கிளார்க் ஜோடியும் அதிரடி ஆட்டத்தில் இறங்கியது. பவுண்டரி, சிக்ஸர்களென உலக லெவன் பந்துவீச்சை சைமன்ஸ் விளாசித் தள்ளினார். கிளார்க்கும் தன் பங்குக்கு இரட்டை ஓட்டங்களைக் குவித்தார்.

50 ஓவர்கள் நிறைவில் அவுஸ்ரேலிய அணி 4 விக்கெட் இழப்புக்கு 328 ஓட்டங்களைக் குவித்தது. இதனால், சைமன்ஸ் ஆட்டமிழக்காமல் 31 ஓட்டங்களை எடுத்திருந்தார். 14 பந்துகளை மட்டும் எதிர்கொண்டு 1 பவுண்டரி, 2 சிக்ஸர்களுடன் இவர் இந்த ஓட்டங்களைப் பெற்றார்.

கிளார்க் ஆட்டமிழக்காமல் 17 ஓட்டங்களை 15 பந்துகளில் 1 பவுண்டரியுடன் எடுத்தார்.

பந்துவீச்சில் 10 உதிரி ஓட்டங்களைக் கொடுத்த உலக லெவன் அணி சார்பில் பிளின்ரொப் 1, முரளிதரன் 1, ஷேவாக் 1 விக்கெட்டை வீழ்த்தினர். தலா 8 ஓவர்கள் பந்துவீசிய பிளின்ரொப் மற்றும் அக்தர் அதிகபட்சமாக முறையே 64, 61 ஓட்டங்களை விட்டுக்கொடுத்தமை குறிப்பிடத்தக்கது.

கடினமான இலக்குடன் உலக லெவன் அணி பதிலுக்குத் துடுப்பெடுத்தாடத் தொடங்கியது. இம்முறை தொடக்க வீரர்களில் மாற்றம் செய்யப்பட்டு சங்கஹாரவுக்குப் பதிலாக ஷேவாக்குடன் கைல் தொடக்க வீரராக களமிறங்கினார்.

வந்த வேகத்தில் அதிரடியாக பவுண்டரிகளை விளாசித் தள்ளிய ஷேவாக், முதல் விக்கெட்டாக வீழ்த்தப்பட்டபோது, உலக லெவன் அணியின் ஸ்கோர் வெறும் 27ஆக மட்டுமே இருந்தது.

பிரெட் லீயின் பந்துவீச்சில் பொண்டிங்கிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்த ஷேவாக் 15 பந்துகளில் 4 பவுண்டரிகளுடன் 21 ஓட்டங்களை எடுத்தார்.

அடுத்து கைலுடன் சங்கஹார இணைந்தார். இருவருமே ஒருவருக்கொருவர் சளைத்தவரல்ல என நிரூபிக்கும் வகையில் அதிரடி ஆட்டம் ஆடி ஓட்டங்களைக் குவித்தனர்.

அவுஸ்ரேலிய அணியின் ஸ்கோர் உயர்வாக இருந்ததால் பொறுப்பை உணர்ந்து ஆடிய இவர்கள் பந்துகளை பவுண்டரிகளுக்கு விரட்டியடித்தனர்.

முதல் போட்டியில் சேர்க்கப்படாமல் - எதிர்பார்ப்புடன் களமிறக்கப்பட்ட கைலும், முதல் போட்டியில் உலக லெவனின் மானத்தைக் காக்கப் போராடிய சங்கஹாரவும் அணியின் எதிர்பார்ப்பை பொய்யாக்காமல் விளையாடினர்.

ஸ்கோர் 125ஐ எட்டியபோது, உலக லெவன் அணியின் இரண்டாவது விக்கெட் வீழ்த்தப்பட்டது. தொடக்க வீரர் கைல் - வற்சனின் பந்துவீச்சில் கில் கிறிஸ்டிடம் பிடிகொடுத்து தனது விக்கெட்டைப் பறிகொடுத்து பவிலியன் திரும்பினார்.

இவர் 48 பந்துகளை எதிர்கொண்டு 8 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் 54 ஓட்டங்களை எடுத்தமை குறிப்பிடத்தக்கது. அடுத்து, சங்கஹாரவுடன் இணைந்து ஆட கலிஸ் களமிறக்கப்பட்டார்.

உலக லெவன் அணியின் ஸ்கோர் வேகமாக உயர்ந்துகொண்டிருந்தபோதும் - ஸ்கோர் 151ஐ எட்டியபோது பின்னடைவு ஆரம்பமானது. முதலில் சங்கஹார ரன் அவுட்டாக துரதிஷ்டம் தொற்றிக் கொண்டது.

சங்கஹார 44 பந்துகளில் 9 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் 61 ஓட்டங்களை எடுத்த நிலையில் ஆட்டமிழந்து சென்றார்.

அடுத்து இவருக்குப் பதிலாக லாறா களம் புகுந்தார். அதற்கிடையில் ஸ்கோர் 157ஆக இருந்தபோது அடுத்தடுத்து இரண்டு விக்கெட்டுக்களை உலக லெவன் பறிகொடுத்தது.

முதலில் கலிஸ் 25 பந்துகளில் 11 ஓட்டங்களை எடுத்தநிலையில் ரன் அவுட்டாக, ராவிட் களமிறங்கினார். ஆனால், அடுத்த பந்திலேயே பிறாக்கன், லாறாவை வெளியேற்றினார்.

10 பந்துகளை எதிர்கொண்டு 5 ஓட்டங்களை மட்டும் எடுத்திருந்த லாறா சைமன்ஸிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்து சென்றார்.

ராவிட்டுடன் பிளின்ரொப் இணைந்து

## விளையாட்டு

கொண்டதும் மீண்டும் உலக லெவன் சற்று நிம்மதிப் பெருமூச்சு விட்டது.

ஆனால், இவர்களின் நிதான ஆட்டம் வெற்றிக்கு உதவாது என்ற நிலையில் சற்றே வேகம் பிடிக்க - ஸ்கோர் 220ஆக இருந்தபோது - பிளின்ரொப்பை வீழ்த்தினார் பிறாக்கன்.

பிறாக்கன் வீசிய பந்தை அடித்தபோது - சைமன்ஸிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்த பிளின்ரொப், 50 பந்துகளை எதிர்கொண்டு 3 பவுண்டரிகளுடன் 42 ஓட்டங்களை எடுத்தார்.

அடுத்து ராவிட்டுடன் பீற்றர்சன் இணைந்து கொண்டார். ஆனால், ஸ்கோர் 235 ஆக இருந்தபோது - ராவிட் சைமன்ஸின் பந்தில் போல்டாகி வெளியேறும் நிலை ஏற்பட்டது.

இவர் 35 பந்துகளில் 2 பவுண்டரிகளுடன் 26 ஓட்டங்களை எடுத்திருந்தார். அடுத்து பொலக் களமிறங்க, எதிரில் நின்ற பீற்றர்சன் ஸ்கோர் 250ஐ எட்டியபோது வெளியேறினார். 22 பந்துகளில் 1 பவுண்டரியுடன் 16 ஓட்டங்களை எடுத்த நிலையில் - கிளார்க் வீசிய பந்தை வட்சனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார் பீற்றர்சன்.

இவரை அடுத்து விற்றோரி மைதானத்துக்குள் இறக்கப்பட்டார். ஆனால், ஸ்கோர் 267ஐ எட்டியபோது - 9 ஆவது விக்கெட்டாக பொலக் 15 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார்.


கிளார்க்கின் பந்தை அடிக்கப்போய் வைற்றிடம் பிடிகொடுத்து இவர் ஆட்டமிழந்தார்.

இதையடுத்து கடைசி விக்கெட்டாக களமிறங்கிய அக்தர் 2 ஓட்டங்களுக்கு பிறாக்கனின் பந்தில் வட்சனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.


45.3 ஓவர்களிலேயே 273 ஓட்டங்களை மட்டும் பெற்றநிலையில், உலக லெவன் அணி சகல விக்கெட்டக்களையும் இழந்து 55 ஓட்டங்களால் தோல்வி கண்டது.


பந்துவீச்சில் பிறாக்கன் 3, கிளார்க் 2, லீ 1, வட்சன் 1, சைமன்ஸ் 1 விக்கெட்டை வீழ்த்தினர்.

முதலாவது போட்டியிலும், நேற்றைய இரண்டாவது போட்டியிலும் உலக லெவன் அணி தோல்வியடைந்ததால், சுப்பர் சீரிஸ் ஒருநாள் தொடரை அவுஸ்ரேலிய அணி கைப்பற்றியது.













## பீற்றர்சனுக்கு காயம்




மெல்போர்ன் —

அவுஸ்ரேலிய அணியுடனான நேற்றைய இரண்டாவது போட்டியில் - உலக லெவன் அணியில் இடம்பெற்றிருந்த இங்கிலாந்து வீரர் கெவின் பீற்றர்சன் காயமடைந்தார்.

அவுஸ்ரேலிய அணிக்கு எதிராக களத்தடுப்பில் ஈடுபட்டிருந்தபோது - கடைசி ஓவரில் பீற்றர்சனுக்கு தொடையின் பின்புறத்தில் பந்துபட்டதால், காயம் ஏற்பட்டது.

இதனால், அவர் உடனடியாக உடற்பயிற்சி நிபுணருடன் மைதானத்தைவிட்டு வெளியேறினார். எனினும், இவருக்கு ஏற்பட்ட காயம் பாரதூரமானதாக இல்லையென தகவல்கள் தெரிவித்தன.

பின்னர், உலக லெவன் அணியின் 8ஆவது வீரராக துடுப்பெடுத்தாட பீற்றர்சன் களமிறங்கிய போது இவருக்கு பதில் ஓட்டக்காரராக கிறிஸ் கைல் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது.






## சிறுவர் அரங்கம்

# துருவன்



## சிந்தனைக்கு

நீளமான பேச்சு
குறைவான மதிப்பையே பெறும்.
முட்டாளுடைய
கேள்விக்கு மௌனமே
மேலான பதில்.
ஜெ.ஜெயக்கமலன்

## அன்புள்ள சிறுவர்களே!

ஒக்ரோபர் முதலாம் திகதி சிறுவர்தினம் உங்கள் அனைவருக்கும் கொண்டாட்டம் தான். உங்களுக்கு நிறைய அன்பளிப்புப் பொருட்கள் எல்லாம் கிடைத்திருக்கும்.

சிறுவர்களாகிய நீங்கள் இந்த சிறுவயதில் இருந்து சிறந்த ஒழுக்கம் நற்பண்புடையவராக திகழ வேண்டும். இதனையே எந்தக் குழந்தையும் நல்ல குழந்தை மண்ணில் பிறக்கையில். அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே எனக் கூறப்படுகிறது.

ஒருவர் நல்லவன் என்று பெயர் கேட்பதற்கு நீண்ட நாட்கள் தேவைப் படுகிறது. ஆனால், தீயவன் என ஒரு நிமிடத்தில் கேட்டுவிடமுடியும். எனவே, நீண்ட நாட்கள் கடந்து கிடைத்த நல்லவன் என்ற பெயர் ஒருசில செயல்களால் மறைக்கப்பட்டுவிடுகின்றது.

எனவே, சிறுவர்களாகிய நீங்கள் நல்லவர்களாகவே என்றும் திகழ் வதற்கு நல்ல செயல்களில் ஈடுபடவேண்டும்.

அன்புடன்,
சாருஅக்கா.

## இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?
அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந்தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது. நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந்தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும். விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## இளந்தேனீக்கள் கழகம்

### விண்ணப்பம்

முழுப் பெயர் :..............................
கற்கும் பாடசாலை :..............................
கற்கும் தரம் :..............................
வீட்டு முகவரி :..............................
பிறந்த திகதி :..............................
ஆர்வமுள்ள துறைகள் :..............................
..............................

.................... ....................
திகதி ஒப்பம்

.................... ....................
அதிபர்/ஆசிரியர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

## இளந்தேனீக்கள் கழக அங்கத்தவர்கள்



பெயர் :- பா.மதனீதா
பாடசாலை :- யாழ்.புனித ஜோன் பொஸ்கோ மகாவித்தியாலயம்
தரம் :- 3
ஆர்வமுள்ள துறைகள்:-
தொலைக்காட்சி பார்த்தல்,
கதை வாசித்தல்.

பெயர் :- ச. பகீரதி
பாடசாலை : யாழ்.வட.இந்துமகளிர் கல்லூரி
தரம் :- 10A
ஆர்வமுள்ள துறைகள்:-
கிரிக்கெட் பார்த்தல்,
முத்திரை சேகரித்தல்.



பெயர் :- மா.ரெஷான்
பாடசாலை :-வள்ளிபுனம் கனிஸ்ர வித்தியாலயம்.
தரம் :- 6
ஆர்வமுள்ள துறைகள்:-
விளையாட்டு,
படம் வரைதல்.

பெயர் :- சு.நர்மதன்
பாடசாலை : யாழ்.மத்திய கல்லூரி
தரம் :- 10
ஆர்வமுள்ள துறைகள்:-
சித்திரம் வரைதல்,
தொலைக்காட்சி பார்த்தல்,
வானொலி கேட்டல்.

பெயர் :- செ.பிருந்தாபன்
பாடசாலை : யாழ்.மாணிக்கவாசகர் வித்தியாலயம்.
தரம் :- 3
ஆர்வமுள்ள துறைகள்:-
பந்து அடிப்பது
வேறுவிளையாட்டுகள்
படிப்பது.

பெயர் :- அ.நிறோஜினி
பாடசாலை :- யாழ்.றோமன் கத்தோலிக்க பாடசாலை
தரம் :- 6
ஆர்வமுள்ள துறைகள்:-
படித்தல்,
பாடுதல்,
விளையாடுதல்.



உலக அதிசயம்

## ஈபிள் கோபுரம்



ஜெ.ஜெயக்கமலன்
தரம் - 7A

பிரான்ஸ் தலை நகர் பாரிஸில் இது உள்ளது. 30 சதுர அடித்தளத்தில் உயரத்தில் செங்கற்களால் சுவர் கட்டி அதன் மேல் 7300 தொன் இரும்பையும் உருக்கிப் பயன்படுத்தி 300 மீற்றர் உயரத்தில் இந்தக் கோபுரம் கட்டப்பட்டதாம்.

1889 ஆம் ஆண்டில் இதனைக் கட்டும் போது இதற்கான செலவு ஒரு கோடியே இருபது லட்சம் தானாம்.

அலெக்ஸாண்டர் கஷ்டர் ஈபிள் என்பவரே இதனைக் கட்டினாராம்.

இதன் உச்சியிலிருந்து பார்த்தால் 137 கிலோமீற்றர் சுற்றளவுள்ள காட்சிகள் தெரியுமாம்.

## சிந்தனை முத்துக்கள்

- வாழ்க்கை என்பது இயற்கை அளிக்கும் செல்வம் - ஆனால், நல்ல வாழ்க்கை என்பது ஞானம் அளிக்கும் செல்வம்.
- இன்று செய்ய வேண்டியதை இப்போதே செய்து விடுங்கள். நாளை ஏதேனும் இடையூறு வரக்கூடும்.
- மகிழ்ச்சியாக வாழ உண்மையாக உழையுங்கள். பிறர் நம்புவதற்காக மகிழ்ச்சியாய் இருப்பதற்கு முயற்சி செய்யாதீர்கள்.
- தோல்விகளுக்கு முக்கிய காரணம் அறிவுக் குறைபாடு அல்ல, கவனக்குறைவே ஆகும்.
- தோல்வியைக் கண்டு துவளாமல் போராடு - காலம் வெற்றிக்கனியுடன் உனக்காகக் காத்திருக்கும்.

ஸ்ரீகந்தராஜா - அசோக்கமாலா
தரம் - 11
யாழ்.உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

## நாடுகளும், தலைநகரங்களும்



1. சீனா - பீஜிங்
2. இந்தியா - புதுடில்லி
3. ஜப்பான் - டோக்கியோ
4. பாகிஸ்தான் - இஸ்லாமா பாத்
5. இலங்கை - கொழும்பு
6. நியுசிலாந்து - வெலிங்டன்
7. கனடா - ஒட்டாவா
8. அவுஸ்ரேலியா - கென்பரா
9. நோர்வே - ஒஸ்லோ
10. அமெரிக்கா - வாஷிங்டன்
11. சிங்கப்பூர் - சிங்கப்பூர்
12. இங்லாந்து - லண்டன்
13. இத்தாலி - ரோம்

வி.அனற்தவினா - தரம் - 5B
யாழ். நல்லூர் சென்வெனடிக்ற் றோ.க.த.க பாடசாலை

நகைச்சுவைக் கதை

## இரு கழுதைகள்

முன்னொரு காலத்தில் ஒரு பாட்டி இருந்தாள். அவளிடம் இரண்டு கழுதைகள் இருந்தன.

அவள் ஒருநாள் கழுதைகள் இரண்டையும் மேய்ப்பதற்காக வயலுக்குக் கொண்டு சென்றாள்.

அப்போது இரு இளைஞர்கள் எதிரே வந்து கேலியாகப் பாட்டியிடம் "பாட்டியே கழுதைகளின் அம்மாவான உனக்கு எமது காலை வணக்கம்" என்றனர்.

உடனே பாட்டி சிரித்துக் கொண்டு, "என் பிள்ளைகளே! உங்களுக்கும் எனது காலை வணக்கம்" என்றாள்.

ஜெ.ஜெயக்கமலன்,
தரம் - 7A
யாழ்.மகாஜனக்கல்லூரி.


## உலக நாடுகளின் தேசியச் சின்னம்

| | | |
|---|---|---|
| அமெரிக்கா | - | தங்கத்தடி |
| அவுஸ்திரேலியா | - | கங்காரு |
| பிரான்ஸ் | - | அல்லிமலர் |
| கனடா | - | வெள்ளை மலர் |
| பாகிஸ்தான் | - | பிறை |
| ஜப்பான் | - | கூட்டுப்புழுளள |
| ஈராக் | - | சிவப்பு ரோஜா |
| ஈரான் | - | ரோஜா மலர் |
| பிரித்தானியா | - | ரோஜா மலர் |
| இந்தியா | - | சிங்கத்தின் தலை |

ஜெ.ஜெயவர்மன்
தரம் - 5A

## வழியைக் கண்டுபிடியுங்கள்

தொடக்கம்



முடிவு

# நரிக்கு வந்த ஆசை

கொஞ்ச நாட்களாகத்தான் அந்தக் கரடிக்கும் குட்டிக் காண்டாமிருகத்துக்கும் நட்பு. மரம் ஒன்றில் இருந்த தேனை மோப்பம் பிடித்து வந்த போதுதான் எதிர்ப்பட்டது அந்த குட்டிக் காண்டாமிருகம்.

கரடி எந்தவித தயக்கமும் இல்லாமல் காண்டாமிருகத்திடம் பேசியது. தம்பி இதற்கு முன்தான் உன்னை இந்தப் பக்கம் பார்த்ததில்லையே...?

கரடி இப்படிக் கேட்டதும் காண்டாமிருகம் தயக்கம் நீங்கிப் பதில் சொன்னது. இலை, தழை, செடி, கொடிகள்தான் இதுவரை எங்கள் உணவு.

'தெரியும் தம்பி'


'எனக்குத் தேன் சாப்பிட ஆசை. அது ரொம்ப இனிப்பாக இருக்குமாமே?'

' யார் சொன்னது?'

' என் நண்பர்கள் தான்.'

' தேன் இனிப்புத்தான் ஆனால் அது எட்டாத உயரத்தில் அல்லவா இருக்கிறது?'

' அது எனக்கும் தெரியும் என்னால் மரமெல்லாம் ஏறமுடியாது. அதே நேரம் உங்களால் மரத்தில் ஏறித் தேனெடுக்க முடியும் என்பது எனக்குத் தெரியும்'.



' இதை யார் சொன்னது?'

' நான் தேனெடுக்க மரம் ஏறினால் முழுத் தேனையும் குடித்து விட்டுத்தான் கீழே இறங்குவேன்'

' எப்போதும் அப்படிச் செய்ய முடியாதே'

' என்ன சொல்கிறாய்...?'

' நண்பர்களுக்கென்று சில விஷயங்களை விட்டுக் கொடுக்கத்தான் வேண்டி வரும்'

' உண்மைதான் . ஆனால் யார் நண்பன்?'

' ஏன் நானாக இருக்கக் கூடாதா?'

' இப்போது தானே நாம் சந்திக்கவே ஆரம்பிக்கிறோம்.

' நல்ல நட்பு ஆரம்பிக்க நாள் கணக்குத் தேவையில்லையே'

' புத்திசாலித்தனமாகப் பேசுகிறாய்'

' உங்களைக் கவர்ந்து விட்டதிலேயே நட்புக்குரியவனாகி விட்டதை உணர்ந்து கொண்டேன்'

' உனக்குத் தேன் கிடைக்கும். அதுவும் இப்போதே. வா என்னோடு'

காண்டாமிருகக் குட்டி கரடியுடன் போனது. நடந்த இந்த உரையாடலை புதர் மறைவில் நின்றபடி கவனித்துக் கொண்டிருந்த ஒரு நரி ஒரு முடிவுக்கு வந்தது.

காண்டாமிருகக் குட்டிக்கு ஒரு குட்டி தேன் மீது ஆசை ஏற்பட்டதோ, அதேமாதிரி நரிக்கு அந்த காண்டாமிருகத்தின் இறைச்சி மீது ஆசை ஏற்பட்டது.

அதே நேரம் காண்டாமிருகம் தன் மீது நடுங்கிவிழுந்தால் கூட எலும்பு நொறுங்கிப் போகலாம் என்பதும் நரிக்குத் தெரிந்தே இருந்தது. ஆனாலும் ஆசை உட்புகுந்து விட்டால் அதை நிறைவேற்ற மனம் குறுக்கு வழியில் யோசித்துக் கொண்டு தானிருக்கும். நரியும் தனக்கே உரிய அந்தக் குறுக்கு வழியில் யோசித்ததில் ஒரு வழி புலப்பட்டது.

தினமும் அலைந்து திரிந்து காண்டாமிருகம் எங்கெங்கே போகிறது என்று உளவு பார்த்தது நரி. ஒரு குறிப்பிட்ட இடத்தில் உள்ள புல்வெளிக்கு மட்டும் தினமும் காண்டாமிருகம் வருகிறது என்பது தெரியவர, அந்த இடத்தில் நாலடிக்குக் குறையாமல் ஒரு குழி தோண்டியது. குழியின் மேல் இலைகளைப் பரப்பி மண் போட்டு மூடி வைத்தது.

அன்றைக்கு பார்த்து காண்டாமிருகத்துக்குக் கரடி தேன் தருவதாகச் சொன்ன நாள். அதனால் மிகுந்த எதிர்பார்ப்போடு காண்டாமிருகம் கரடியை எதிர்பார்த்துக் காத்திருந்தது.



'கரடி வருவது தாமதமாகிக் கொண்டே போக'

' சரி என்ன வேலையோஇருந்து விட்டுப் போகட்டும் நாம போவோம்' என்று காண்டாமிருகம் நடக்க ஆரம்பித்தது. நரி எதிர்பார்த்துக் காத்திருக்கும் அந்தப் பாதையில் -

இன்னும் நாலடி எடுத்து வைத்தால் காண்டாமிருகம் பள்ளத்தில் விழுந்து விடும்.

அதற்குள் நடந்து அந்தச் சம்பவம்.

'தொப்'பென்று காதைப் பிளக்கும் சத்தம். அப்புறமாய் அந்தச் சத்தத்துக் குரிய பொருள் உருண்டு அந்த பாதைக்கு வந்து வந்த வேகத்தில் காணாமல் போனது.

அப்போது தான் பனை மரத்தில் இருந்து பனம் பழம் ஒன்று உருண்ட வேகத்தில் அந்த பொய்ப்பள்ளத்தை அடைந்து பாரம் தாங்காமல் பள்ளத்திலேயே விழுந்தது தெரியவந்தது.

அட்டா யாருக்கோ பள்ளம் தோண்டி இருக்கிறார்கள். புரிந்து கொண்டு அதிர்ந்த காண்டாமிருகம் சுற்றுமுற்றும் பார்த்த நேரத்தில் தான் சரேலெனப் புதருக்குள் பதுங்கி இருந்த நரி அதன் கண்ணில் பட்டது.

சற்றுத் தூரத்தில் அப்போதுதான் வந்து கொண்டிருந்த கரடியிடம் ஓடிப் போய் விஷயம் சொன்னது காண்டாமிருகம்.

கரடி வேகமாக நரி ஒளிந்திருந்த புதரை நெருங்கி அங்கு பதுங்கியிருந்த நரியை தலைக்கு மேலே தூக்கிக் கொண்டு வந்தது.

' என்னை மன்னித்து விடுங்கள் இதுபோல் நடந்து கொள்ளமாட்டேன்.' என்று வலியில் புலம்பியது நரி.

'நண்பரே.. போகிறான் விட்டுத் தள்ளுங்கள். 'காண்டாமிருகம் சொல்ல'

'அவன் உன்னைப் பிடித்து இரையாக்க பள்ளம் தோண்டி இருக்கிறான். அவனுக்கா இரக்கம்...?'

கரடி இப்படிக் கேட்க காண்டாமிருகமோ ஒரு தடவை விட்டுத்தான் பாருங்களேன். திருந்தமாட்டான் இல்லையா?' என்றது.

'திருந்துவானா இவனா? தந்திரத்தாலே ... ய சகலமும் பண்ணத் தெரிந்த இவனா திருந்துவான். நல்ல ஆளப்பா நீ சொல்லியபடியே நரியை மறுபடியும் தலைக்கு மேலாக சுற்றித் தூக்கி எறிந்தது கரடி.



# பரிசு

கிகி என்ற ஆடும், பாபா என்ற செம்மறி யாடும் பள்ளித் தோழர்கள். பாடசாலை இறுதி நாளான அன்று அவர்கள் வீட்டுக் குச் செல்லவேண்டி வந்தது.

நண்பர்கள் யாவரும் தங்கள் ஆசிரியரான ஒருவரிடம் பிரியாவிடை பெறத் தீர்மானித்தனர். சேர் இன்று நாம் வீட்டுக்குச் செல்கிறோம். அதனால், உங்கள் ஆசீர்வாதம் எமக்குத் தேவை என்றதற்குப் புன்னகைத்த அவர், மாணவர்களை ஆசிர் வதித்ததோடு, ஒவ்வொருவருக்கும் பரிசுகளையும் வழங்கினார். கிகி ஒரு பழைய புத்தகத்தையும், பாபா ஒரு சங்கிலியையும் பரிசாகப் பெற்றனர்.





தத்தமது பரிசுகளுடன் அவர்கள் நடந்து சென்ற வேளை, பாபாவின் சங்கிலி குறித்தே பெருமை பேசிக் கொண்டனர். இது கிகியைக் கவலையில் ஆழ்த்தியது. பளிச்சிடும் சங்கிலி போன்ற எதையாவது கொடுக்காமல் பழைய புத்தகமொன்று தனக்குக் கொடுக்கப்பட்டது ஏனென அது ஆச்சரியப்பட்டது. தனக்கு வழங்கப்பட்டதற்கு மாற்றீடாக பாபாவிடமுள்ள சங்கிலியைக் கேட்டுப் பார்த்தபோது அது மறுத்துவிட்டது.

நன்றி பரிவரும் பேசிக்கொண்டிருக்கையில் கும்பன், தம்பன் என்ற பெயர்களுடுடைய இரு திருடர்கள் அவர்களை நோக்கி வந்தனர். அவர்களிடமிருந்த பெறுமதியான பொருட்களைத் தராத பட்சத்தில் அவர்களைத் தாக்கவும் முயன்றனர். முதலில் சங்கிலியைப் பாபாவிடம் கேட்டபோது மறுக்கப்பட்டதால் கோபமடைந்ததம்பன் என்ற திருடன், பாபாவைத் தாக்கிவிட்டுச் சங்கிலியை அபகரித்துக் கொண்டான் .



பின் கிகியின் பக்கம் திரும்பிய அவர்களிடம் தன் புத்தகத்தை கிகி கைளித்தது. அந்தப் புத்தகத்தை அதன் மீதேவீசியெறிந்த தம்பன் பழைய புத்தகத்தில் தனக்கு ஆர்வமெதுவுமில்லையெனக் கூறினான்.

கிகி உடனே புத்தகத்தைத் தன்னுடன் கொண்டு சென்றதால், அதைக் கண்ட அவனது பெற்றோர் அந்தப் பழைய புத்தகம் மிக அரிதானதும், விலை மதிக்க முடியாத ஒன்றென்று கூறினர். எனவே தன்னிடமிருந்த பரிசுப் பொருளை மாற்றிக் கொள்ளாததையிட்டுப் பெருமகிழ்ச்சியடைந்தது கிகி.

ஒருவர் பெற்ற பொருளில் பேராசைப்படவோ அல்லது பிறர் பொருளை அடையவோ எவரும் முயற்சிக்கக் கூடாது.

# நீர் – சில புள்ளித் துளிகள்


- நீர் ஆவியாகி வளிமண்டலம் முழுவதும் பரவுகிறது. மீண்டும் இந்த நீர் கடலைச் சென்று அடைகிறது. இந்தச் சுழற்சியில் 0.005 வீதமான கடல் நீர் மட்டுமே பங்கு கொள்கிறது.
- அதிகமான நீர் பனிப்பாறைகளிலும் ஏரிகளிலும் நிலத்தடி நீரிலும் சேமித்து வைக்கப்படுகின்றது.
- கடல் நீரின் மொத்தக் கொள்ளளவு 317 மில்லியன் கன மைல்கள் ஆகும்.
- ஒவ்வொரு வருடமும் 8,3700 கன மைல் நீர் ஆவியாகி மேகங்களாகத் திரள்கின்றன.
- இவ்வாறு ஆவியாகும் நீர் மீண்டும் கடலை வந்து அடையாவிடின் வருடத்துக்கு 39 அங்குலம் கடல் மட்டம் குறைவடையும்.
- வளி மண்டலத்தில் நீர் 3100 கன மைல் அளவுக்கு விரவியுள்ளது.
- கடலிலிருந்து ஆவியாகும் நீரனைத்தும் ஒரே நேரத்தில் மழையாக பொழிந்தால், பூமிப் பரப்பில் 1 அங்குல உயரத்துக்கு நீர் தேங்கி நிற்கும்.
- ஒரு சொட்டு நீரின் வாழ் நாள், காற்றில் 12 நாட்கள் பனிப்பாறைகளில் 40 வருடங்கள், ஏரிகளில் 100 வருடங்கள், நிலத்தடி நீரில் அதன் ஆழத்தைப் பொறுத்து 200 முதல் 10000 வருடங்கள்.

# விடுகதைகள்

1. அண்ணனும், தம்பியும் இரண்டுபேர் அவர்களைச் சுற்றிப் பன்னிரெண்டு பேர்.
2. சின்னத் தம்பி சிவப்பு தம்பி திறந்தவாய் மூடாத தம்பி
3. அழுத்தி அழுத்தி மிதித்தால் அலறி த்துடித்து ஓடும்.
4. இந்த ஊரிலே அடிபட்டவன் அடுத்து ஊரிலே போய்ச் சொல்லுவான்.
5. உயிர் இல்லாத நீதிபதி ஒழுங்காக நியாயம் சொல்லுகிறார்.
6. ஓடையில் ஓடாத நீர் ஒருவரும் குடிக்காத நீர்
7. திரி இல்லாத விளக்கு உலகம் எங்கும் ஒளிதருகிறதாம்.
8. ஆயிரம் பேர் அணிவகுத்து போனாலும் வந்த சுவடு தெரியாது.

| | |
|---|---|
| 1. கடிகாரம் | 5. தராசு |
| 2. பச்சைக்கிளி | 6. கண்ணீர் |
| 3. தந்தி | 7. எறும்பு |
| 4. தபால்பெட்டி | 8. சூரியன் |

# சிலந்தி உழவனின் நண்பன்



வயல் வெளிகளில் பயிர்களைத் தாக்கும் பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதில் சிலந்திகள் உழவனுக்குப் பெரும் உதவி புரிகின்றன. குறிப்பாக நெல் வயல்களில் சிலந்திகளின் சேவை அதிகம்.

உயிரியலாளர் சிலந்திகளை ஏழு வகையாகப் பிரித்துள்ளனர். பூச்சிக் கொல்லி மருந்துகள் பயன்படுத்தாத வயல்களில் சிலந்திகள் விரைவாகப் பெருகி, பயிர்களுக்குத் தொல்லை தரும் பூச்சிகளை பெருமளவில் உண்டு அழிக்கின்றன. இயற்கையின் இந்த உணவுச் சங்கிலி ஏற்பாடு மனிதனுக்கு உதவும் வகையில் உள்ளது. ஆனால் மனிதன் பயன்படுத்தும் பூச்சிக் கொல்லி மருந்துகள் பிற நச்சு உயிர்களோடு உழவனின் நண்பனான சிலந்திகளையும் அழிக்கின்றன.

பூச்சிக் கொல்லி மருந்துகளின் தாக்குதல் இல்லையானால் சிலந்திகள் 100 முதல் 150 நாட்கள் வரை வாழும். தம் வாழ்நாளில் பெண் பூச்சிகள் 90 இலிருந்து 800 வரை முட்டைகள் இடும். முட்டைகளின் எண்ணிக்கை இனத்துக்கு இனம் வேறுபடுகிறது. சிலந்திகளின் பெண் பூச்சிகள், ஆண் பூச்சிகளை விடப் பெரியதாக இருக்கும்.

முட்டையிலிருந்துவெளிவரும் குஞ்சுகள் சிலந்திகளைப் போலவே சிறிய வடிவில் இருக்கும். சிலந்திகள் தம் உடலிலிருந்து சுரக்கும் ஒரு வகை பசை போன்ற பொருளையே வலை பின்னப் பயன்படுத்துகின்றன. இந்த வலையில் சிக்கும் பூச்சிகளே சிலந்திக்கு இரையாகின்றன. சிலந்திகள் வலை பின்னும் காட்சி விந்தை யானது.

ஒரு பக்கத்திலிருந்து மறுபக்கத்துக்கு குதித்து விரைந்தும் தலை கீழாகத் தொங்கியும் வலை பின்னுவதற்கான இழையை மடித்துக் கொண்டே அதே இழையில் மேலேறுவதும் பார்த்து மகிழத்தக்க செயலாகும். பூச்சிகளை வயல்களில் வாழும் சிலந்திகள் நெற்கயிர்களின் இடையே வலை பின்னி அதன் நடுவில் உணவுக்காக காத்திருக்கும் பந்த வரும் சிறு பூச்சிகள் வலையில் சிக்கியவுடனே விரை ந்து சென்று அதன் சாற்றை உணவாக உறிஞ்சும். உழவனுக்கு சிலந்தி செலவில்லாத பூச்சிக் கொல்லி நண்பன். நம் வீடுகளிலும் வலை பின்னிவாழும் சிலந்திகளைப் பார்த்திருப்பீர்கள்.

கிராமங்களில், பனை வெல்லம் (கரும்புக்கட்டி) சுண்ணாம்பு சிலந்தி வலை சேர்ந்த கலவையை மண்பாண்டங்களில் ஏற்படும் சிறு ஓட்டைகளை அடைக்கப் பயன்படுத் துவார்கள்.

# உங்கள் கைவண்ணம்




அ.மக்கின்
தரம் - 07
கலட்டிறோ.க.



சி.நிஜா
தரம் - 05
யாழ்.மட்டுவில் தெற்கு
அ.மி.த.க.பாடசாலை




செ.நிருஷா
தரம் - 9
யாழ்.சுண்டுக்குழி
மகளிர் கல்லூரி.




ச.பகிரதி
வட இந்து
மகளிர் கல்லூரி
பருத்தித்துறை.



செ.பானுஷா
தரம் -06
யாழ்.சுண்டுக்குழி
மகளிர் கல்லூரி




கி.யுகன்
தரம் -07
யாழ்.கலட்டி றோ.க.த.க
ஆண்கள் பாடசாலை.



இ.பிரியங்கா
தரம் - 05
சுண்டுக்குழி
மகளிர் கல்லூரி.



## கத்தியால் வெட்டிய பின்னும் நகரும் தீப்பெட்டி



**தேவையான பொருட்கள்**
1. தீப்பெட்டி
2. அகலமான கத்தி

**செய்முறை**

1. தீப்பெட்டிகளின் உட்பகுதியை படத்தில் உள்ளவாறு 3 செ.மீற்றர் அகலத்தில் வெட்டிக் கொள்ளவேண்டும்.
2. தீப்பெட்டியின் வெளிப்பகுதியைத் தனியே எடுத்து கத்தியை கால் பகுதிக்கு செருகும் அளவுக்கு இடைவெளி செய்து கொள்ளவேண்டும்.
3. தீப்பெட்டியை மூடியினுள் வைத்து கத்தியை ஏற்கெனவே செய்த இடைவெளியில் செருகிக்கொள்ள வேண்டும்.
4. கத்தியைச் செருகிய பின்னும் தீப்பெட்டியின் உள்ள றையை முன்னும் பின்னும் அசைப்பது ஆச்சரியப்பட வைக்கும்.

**இரகசியம்** : -உள்ள பெட்டியில் ஏற்கனவே நாம் அகலமாக வெட்டிய பகுதி உள்ளதால் செருகிய கத்தி உள்மூடியின் அசைவைத் தடுப்பதில்லை.


## சிறகடிக்கும் தாள்



1. பட்டத்துக்கு ஒட்டும் வால் பகுதி ஒன்றைச் செய்து கொள் ளுங்கள். அதாவது ஒரு அங்குல அகலமும் ஒரு அடி நீளமும் உள்ள சிறிய வால் பகுதியை தாளில் செய்து கொள்ளுங்கள்.

2. தாளின் முனையை உதட்டருகில் வை த்து ஊதவும், என்ன நடக் கிறது? கவ னிக்கவும்.

## போரிடும் வீரர்கள்



1. பழைய நோட்டுப் புத்தக அட்டையை எடுத் துக்கொள்ளுங்கள். அதில் 2 அங்குல அகலத்துக்கு 6 அங் குல நீளத்தில், இரண்டு துண்டு களை வெட்டி எடுத்துக்கொள் ளுங்கள்.

2. அவற்றில் மனித உருவங் களை வரைந்து, கத்தரி ஒன் றின் மூலம் வெட்டி எடுத்து அருகருகே தொங்கவிடுங்கள்.

3. இருவருக்கும் நடுவே ஊதுங்கள். என்ன நடக்கிறது? கவனியுங்கள்.

## வேகமான குதிரை



மொகலாய மன்னர் ஹுமாயூன் சபையில் அன்வர் என்னும் கவிஞர் இருந்தார். அவருக்கு ஒரு குதிரையை அளிக்கும்படி ஹுமாயூன் குதிரை பாதுகாவலரிடம் உத்தரவிட்டார்.

பாதுகாவலரோ சரியான கஞ்சப் பேர்வழி. லாயத்தில் இருந்த குதிரைகளிலேயே நோஞ்சான் குதிரை ஒன்றை தேர்ந்தெடுத்து அன்வருக்குக் கொடுத்தார். அதுவோ இன்றோ, நாளையோ என்றிருந்தது. அன்வர் பெற்றுச் சென்ற அந்தக் குதிரை அன்றிரவே இறந்து போய் விட்டது.

மறுநாள் காலை கவிஞர் அன்வர் நடந்து வருவதை ஹுமாயூன் பார்த்தார். ''நீங்கள் வாங்கிச் சென்ற குதிரை என்னவாயிற்று? நீங்கள் நடக்கக் கூடாது என்பதற்காகத் தானே குதிரையை வழங்கி உத்தரவிட்டேன்'' என்றார் ஹுமாயூன்.

"மன்னா! அந்தக் குதிரை மிகவும் சக்தி வாய்ந்தது. ஒரே நாளில் இரவில் பூமியில் இருந்து சொர்க்கத்தைச் சென்றடைந்துவிட்டது.'' தனக்கே உரிய நகைச்சுவைப் பாணியில் அன்வர் சொன்னதும் அவையில் பலத்த சிரிப்பு எழுந்தது.

## ஆபத்திற்கு உதவாத நண்பன்

இரண்டு நண்பர்கள் காட்டு வழியாகச் சென்று கொண்டிருந்தார்கள். திடீரெனக் கரடியொன்று அவர்களுக்கு எதிரில் வந்தது. ஒருவன் மரத்தில் ஏறி உச்சிக் கிளையில் அமர்ந்து கொண்டான். மற்ற வனுக்கு மரத்தில் ஏறத் தெரியாது. அதனால் செய் வது என்ன என்று தெரியாது முழித்தான்.

அவனுக்கு முன்பு படித்தது ஞாபகம் வந்தது. "செத்தவர்களைக் கரடி ஒன்றும் செய்யாது." துணிந்து செயற்பட்டான். செத்தவனைப் போல விழுந்து கிடந்தான்.

கிட்ட வந்த கரடி அவனது முகத்துக்கருகே முகர் ந்து பார்த்தது. மூச்சு வரவில்லை. செத்து விட்டதாக நினைத்துத் தன்வழியே போனது.

சிறிது தாமதித்து அவன் எழுந்து பார்த்தான். கரடியைக் காணவில்லை. ஓட ஆரம்பித்தான். மரத்திலிருந்தவனும் இறங்கி ஓடினான். மரத்தில் ஏறியவன் கேட்டான். ''நண்பா! கரடி உனது காதுக்குள் ஏதோ சொன்னதே. என்ன சொன்னது?''

"பிரமாதமாக ஒன்றும் சொல்லவில்லை. ஆபத்தில் விட்டுவிட்டு ஓடும் நண்பனை நம்பாதே என்று மட்டும் சொன்னது'' என்று சொல்லிக் கொண்டு அவன் ஓடினான்.

நமது ஈழநாடு

வைர வரிகள்

திறமை ஒருவரை உயரே தூக்கும். பண்பே அவரை உயரத்தில் நிலைபெறச் செய்யும்.
- ஜே.வுடன் -

## நமது நோக்கு

# ஜனாதிபதி வேட்பாளர்களின் 'சுயத்'தை தமிழ் மக்கள் நன்கு அறிந்தே உள்ளனர்!

ஜனாதிபதித் தேர்தலில் எல்லாக் கட்சியினரும் அவரவருக்கான அணியில் தம்மை இணைத்தோ, பிணைத்தோ கொண்டுள்ளதுடன் தாங்கள் சார்ந்துள்ள அணியின் வேட்பாளர் மீதான தமது நம்பிக்கையை இப்போது பகிரங்கமாக வெளியிட்டு, அவருக்கு தங்கள் தங்கள் கட்சிகளின் ஆதரவாளர்களின் வாக்குகளை அர்ப்பணிக்குமாறு வேண்டுகோள் விடுத்து பிரசாரமும் செய்ய ஆரம்பித்துவிட்டனர்.

ஏற்கனவே டசின் கணக்கிலான தமது நிபந்தனைகள் யாவற்றிற்கும் தலையாட்டிய பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கு தமது ஆதரவை வழங்க முன்வந்து, அவருடன் உடன்பாடுளை மேற்கொண்டுள்ள ஜனதா விமுக்தி பெரமுனவும், ஜாதிக ஹெல உறுமயவும், அவரை அவர் சார்ந்த கட்சிக்காகவன்றி, தனிப்பட்ட முறையிலேயே ஆதரிப்பதாகவும் அறிவித்துள்ளனர்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளராகவோ, பொதுஜன ஐக்கிய முன்னணியின் வேட்பாளராகவோ அன்றி, ஏற்கனவே உள்ளக கொள்கை முரண்பாடுகளால் குழம்பிப்போயுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பிலேயே போட்டியிடுவதாகவும் கூறப்படுகிறது.

இந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்ற பெயரிலான சந்தர்ப்பவாதக் கூட்டணியானது, கடந்த பொதுத் தேர்தலின்போது சமாதான முயற்சிகளை முற்றாகவே எதிர்த்து, நிராகரிக்கும் தீர்க்கமான நோக்குடன் ஜனாதிபதி சந்திரிகாவும், அவரது கணவரைக் கொன்றவர்களென ஒரு காலத்தில் அவரால் குற்றம்சாட்டப்பட்டவர்களுமான ஜே.வி.பியினரும் இணைந்து உருவாக்கிய ஒரு கொள்கை ஒருமைப்பாடோ, உறுதியோ அற்ற அமைப்பாகும்.

சுனாமி அனர்த்தத்தின் பின்னரான நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கான பொதுக்கட்டமைப்பு விவகாரத்தில் முரண்பட்டுப் பிரிந்துபோன இந்தக் கூட்டணி, ஜனாதிபதித் தேர்தலில் இரகசியமாக மீண்டும் இணைந்துள்ளது என்றால் மிகையில்லை.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சியைப் பிடித்து அரசாங்கத்தை அமைத்த பின்னர் - நாடாளுமன்ற முதலமர்வில் இருந்தே அரசாலும், அதன் பிரதான பங்காளியான ஜே.வி.பியாலும் மிகமோசமான முறையில் அவமதிக்கப்பட்டும், அவமானப்படுத்தப்பட்டும் நெருக்கடிகளைச் சந்தித்த ஜாதிக ஹெல உறுமயவினர் - தாங்கள் தார்மீக சிந்தையுடன் தம்மபதத்தின் வழி நடக்கும் புத்த துறவிகள் அல்ல, வெறுமனே மூன்றாந்தர அரசியல்வாதிகள்தான் என்பதை இந்த ஜனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பியினருடன் துணையாக மகிந்த ராஜபக்ஷவை ஆதரிக்க முன்வந்ததன்மூலம் உறுதி செய்துள்ளனர் என்றால் அதுவும் உண்மையேயாகும்.

இது ஒருபுறமிருக்க, கடந்த பொதுத்தேர்தலுக்கு முன்னர் வரைக்கும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து பதவிக் கதிரைகளில் ஒட்டிக்கொண்டிருந்து, அதிகார உல்லாசங்களையும், வசதிகளையும் அனுபவித்துவிட்டு, ஐக்கிய தேசிய முன்னணியின் ஆட்சி கலைக்கப்பட்டு தேர்தல் நடைபெறும் போது அதே கட்சியுடன் ஒட்டியிருந்துவிட்டு, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தேர்தலில் வென்றதும் மீண்டும் ஆளும் கட்சிக்கு ஆதரவைத் தெரிவித்து அமைச்சுப் பதவிகளில் ஒட்டிக்கொண்டவர்களான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் மீண்டும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளரான ரணிலிடம் குத்துக்கரணம் அடித்து வந்து இணைந்துள்ளார்கள்.

இந்தக் கட்சித் தாவல்கள், ஆதரவு மாற்றங்கள் மற்றும் கொள்கைப் பிறழ்வுகள் அனைத்தையும், இவர்கள் நியாயப்படுத்தும் காரணங்களையும் கூறியுள்ளார்கள். அதுவும் எந்த விதமான கூச்சமோ, வெட்கமோ இன்றி தமது அரசியல் கொள்கை தொடர்பான 'வங்குரோத்து' நிலையை பகிரங்கமாக வெளிப்படுத்திவிட்டு கம்பீரமாக நிமிர்ந்து திரியவும் செய்கிறார்கள்.

மக்களின் ஏமாளித்தனத்தில் அவர்களுக்கு அவ்வளவு நம்பிக்கை. அவ்வளவுதான். கடைசியில் இப்போது வடக்கு-கிழக்கு வாழ் தமிழர்களின், அதுவும் தமிழ்த் தேசிய உணர்வு மிக்க தமிழர்களின் ஆதரவு யாருக்கு என்ற கேள்வியை உலகம் எழுப்பவே செய்கிறது.

வரப்போகின்ற ஜனாதிபதி எவரானாலும், தமிழ் மக்களின் உரிமைகளை முற்றாக நிராகரிக்கும் பேரினவாத சிங்கள பௌத்த மக்களின் நலன்பேணும் ஒரு அரசியலமைப்பின்மீது சத்தியப்பிரமாணம் செய்து ஆட்சியை நடத்தப்போகும் ஒருவராகவே இருக்கப்போகிறார் என்பது நிச்சயமான ஒன்றாக இருக்கையில் தமிழ் மக்களின் ஆதரவு யாருக்கு வழங்கப்பட்டும் எதுவித பலனும் ஏற்படப்போவது கிடையாது.


தற்போது ஜனாதிபதிப் பதவிக்குப் போட்டியிடும் இரு பிரதான வேட்பாளர்களதும் கட்சிகள், இந்த நாட்டை மாறிமாறி ஆண்ட அரை நூற்றாண்டுக்கும் அதிகமான காலப்பகுதியில் தமிழ் மக்கள் மீதான அடக்குமுறைகளும், ஒடுக்குமுறைகளும் அதிகரித்தே வந்துள்ள சூழலில், சிங்கள ஆட்சித் தலைமைகள் எப்போதும் தமிழர்கள்மீது மேலாதிக்கம் செய்யவே விரும்புவர் என்ற வரலாற்று அனுபவ உண்மையை தமிழ்பேசும் மக்கள் மிகத் தெளிவாகவே உணர்ந்துள்ளனர்.

ஆகவே, அவர்களது ஆதரவு யாருக்கு என்பதை அவர்களே முடிவுசெய்யும் திறன் கொண்டவர்களாகவும் இருக்கவே செய்வர்.

அவர்கள் கொள்கையற்றவர்களுக்கும், நேர்மையற்றவர்களுக்கும், தம்மீது கொடுங்கோலாட்சி செய்தவர்களுக்கும் வாக்களிப்பார்களா என்பதை வேட்பாளர்களே யோசித்து முடிவு செய்துகொள்ளலாமல்லவா?

267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.eezhanaadu.com

## நாடும் நடப்பும்




### 'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# வதந்தீயையும் வகுப்புவாதத் தீயையும் அமைச்சரானாலும் அடக்க வேண்டும்!

தீயிலும் பயங்கரமான தீ எதுவென்று சொல்லும் பார்ப்போம் என்று கேட்டுக்கொண்டே வந்தார் நண்பர் பரமசிவம்.

வதந்தீ என்று நான் சொல்லவேண்டுமென்றுதானே எதிர்பார்த்து இக்கேள்வியைக் கேட்டுக்கொண்டு வருகிறீர் என்று கேட்டேன்.

வதந்தீ மட்டுமல்ல, வகுப்பு வாதத் தீயும் பயங்கரமான தீதான். 1958ஆம் ஆண்டிலும் சரி, அதன் பின்னரும் சரி சிங்களவர்களுக்கும், தமிழர்களுக்குமிடையில் இனக்கலவரத்தைத் தூண்டிவிட்டு, அதைப் பரப்பி நாடு முழுவதுமே வகுப்பு வாதத் தீயைப் பரப்பி, அதைக் கொளுந்து விட்டெரியச் செய்வதற்கு வதந்தீதான் சரியாகப் பயன்படுத்தப்பட்டது என்று பரமசிவம் சொன்னார்.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு லொறிகளில் அனுப்பப்பட்ட மீன் பெட்டிகளுக்குள் பச்சைக் குழந்தைகள் துண்டுகளாக வெட்டி அனுப்பப்பட்டிருந்ததாக வதந்தீ பரப்பப்பட்டது பின்னரும் இனக் கலவரங்கள் மூண்ட ஒவ்வொரு சமயத்திலும் இந்தக் கதை பரப்பப்பட்டதுதான் வேடிக்கை என்று சொன்னேன்.

இந்த வதந்தீகளாவது இனக்கலவரம் வெடித்தபின் பரப்பப்பட்டன. நாட்டில் போர் மூண்டு பல்லாயிரக் கணக்கான உயிர்கள் பலி எடுக்கப்பட்டபின் இப்பொழுதுதான் கடந்த சில வருடங்களாக போர் நிறுத்தம் பின்பற்றப்பட்டு, அமைதி ஓரளவு நிலவுகிறது. மோதல் காலத்திலும் போர் நிறுத்தக் காலத்திலும் ஒற்றுமையாக வாழ்ந்துவரும் முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்குமிடையில் மோதல்களை ஏற்படுத்துவதற்குச் சில விஷமிகள் முயற்சிசெய்து அதில் ஓரளவு வெற்றியும் கண்டனர். பின்னர் உண்மை தெரிந்தபின் முஸ்லிம்களும், தமிழர்களும் மோதல்களுக்கு இடம்கொடுக்காமல் நடந்துகொள்ள முயன்று வருகின்றனர். இன்று ஜனாதிபதித் தேர்தல் தொடங்கியிருக்கும் இந்தச் சமயத்தில் பொறுப்புள்ள முஸ்லிம் அமைச்சர்கள் சிலரே வதந்தியையும், வேண்டுமென்றே கலகத்தைத் தூண்டிவிடும் பேச்சுக்களையும் பேசுவதும் ஊடகங்கள் அவற்றை வெளியிட்டுப் பெருப்பித்துவிடுவதும் நாட்டின் அமைதிக்கு ஆபத்தையும் மக்களுக்கு அதிர்ச்சியையும் ஏற்படுத்தியிருக்கிறது என்று பரமசிவம் சொன்னார்.

ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றிபெற்றால், அதுதான் முஸ்லிம் மக்களின் அடிமைச் சாசனத்தின் ஆரம்பம். அதன் பின்னர் விடுதலைப் புலிகளிடமும் தமிழ் இனவாத சக்திகளின் பிடியிலும் சிக்கிச் சீரழியும் நிலை ஏற்படும் என்று பிரதி அசைச்சர் அன்வர் இஸ்மாயில் கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரி மண்டபத்தில் மஹிந்த ராஜபக்ஷவின் ஜனாதிபதி வேட்பாளர் பிரசார இணைப்பாளர் அலுவலகத்தினால் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்திருக்கிறார். வடக்கு-கிழக்கு மாகாண முஸ்லிம்கள், புலிகளின் அடிமைத் தனத்திலிருந்து மீளவேண்டுமென்றால் பிரதமர் மஹிந்தவை ஜனாதிபதியாக்க வேண்டுமென்று இந்த அமைச்சர் கூறியிருக்கிறார். இதுமட்டுமல்ல, மறைந்த தலைவர் அஷ்ரப்பின் கொலையிலும் புலிகள் தொடர்புள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளதாகவும் அமைச்சர் இஸ்மாயில் புதுக்கரடி விட்டிருக்கிறார். இவ்வளவு காலமும் இதுபற்றிப் பேசாத இவர் இப்போது ஜனாதிபதி தேர்தலில்தான் இதைச் சொல்லவேண்டுமென்று காத்திருந்தாரா? என்று கேட்டேன்.

பல கோடி டொலர்களை ரணிலிடமிருந்து வாங்கிக் கொண்டே முஸ்லிம்களை புலிகளுக்குக் காட்டிக் கொடுத்தார் ஹக்கீம் என்றும், அன்வர் இஸ்மாயில் பேசியிருக்கிறார். இது தேர்தல் பிரசாரம் என்று தள்ளிவிடக்கூடியதல்ல. போகிற போக்கைப் பார்த்தால் சந்திரிகா அம்மையாரின் கணவர் விஜய குமாரணதுங்கவைக் கொலை செய்ததுகூட புலிகள் தான் என்று அன்வர் இஸ்மாயில் போன்றவர்கள் தேர்தல் கூட்டங்களில் பேசினால்கூட ஆச்சரியப்படுவதற்கில்லை என்று சொன்ன நண்பர் பரமசிவம், மூன்று தினங்களுக்கு முன்னர் கல்முனையில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை வைத்து தமிழர் - முஸ்லிம்கள் உறவைக் கெடுத்து குழப்பத்தை ஏற்படுத்தும் அறிக்கைகளை சில முஸ்லிம் அரசியல் கத்துக் குட்டிகள் வெளியிட்டிருக்கின்றன என்று கவலையுடன் தெரிவித்தார்.

தமிழ் - முஸ்லிம் மக்கள் கடந்த சில ஆண்டுகளில் அனுபவித்த இன்னல்களையும் சுனாமிப் பேரழிவினால் கிழக்கில் முஸ்லிம்களுக்கு அழிவு ஏற்பட்ட போது, இந்த அரசியல் கத்துக் குட்டிகள் இருந்த இடமே தெரியாமலிருந்த சமயத்தில் உதவிக்கு வந்தவர்கள் யார் என்பதைக்கூட இன்று மறந்து பேசுகிறார்கள் என்று நான் நினைவூட்டினேன்.

ஜனாதிபதித் தேர்தலில் யார் வெற்றி பெற்றாலும் பெறட்டும். இந்தச் சந்தர்ப்பத்தைத் தங்கள் விசுவாசத்தைக் காட்டுவதற்காக முஸ்லிம், தமிழ் மக்களுக்கிடையில் மோதல் ஏற்படுத்தித் தமது காரியத்தைச் சாதிப்பதன் மூலம் செஞ்சோற்றுக் கடன் கழிக்க முனைபவர்கள் விடயத்தில் முஸ்லிம் மக்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டியது அவசியம். 'நெருக்கடியான அரசியல் சூழ்நிலைகள் மிகுந்துள்ள இந்தக் காலகட்டத்தில் நடைபெற்றுள்ள இந்தத் துப்பாக்கிப் பிரயோகமும் படுகொலைச் சம்பவமும் முஸ்லிம் மக்களது ஆத்திரத்தையும், ஆவேசத்தையும் தூண்டி அவர்களை அசம்பாவிதங்களுக்குள் தள்ளிவிட எடுக்கப்பட்ட எத்தனமாகவும் இருக்கலாம். தூரநோக்கும் சமாதான விருப்பும் கொண்ட முஸ்லிம்கள் இச்சதி வலைக்குள் சிக்கிக்கொள்ள மாட்டார்கள் என்பதை இந்தச் சம்பவத்தின் பின்னணியில் உள்ள சக்திகள் புரிந்துகொள்ளவேண்டும்' என்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதை அவர்கள் உணர்ந்துகொண்டால் போதும் என பரமசிவம் சொல்லி எழுந்தார்.

புறப்பட்ட நண்பர் பரமசிவம் நின்று திரும்பி, வதந்தீயையும்வகுப்பு வாதத்தீயையும் பரப்ப முனைபவர் அமைச்சராக இருந்தாலும்கூட சட்டத்தின் பிடியில் கொண்டுவரப்படவேண்டும். இல்லையேல் மக்களே நேரடியாகக் கேட்கவேண்டும் என்று சொல்லிவிட்டு நடந்தார்.

படுகொலைகள் என்ற விவகாரத்தை நோக்குகின்ற போது, ஐரோப்பிய ஒன்றியம் குறைகளையும், குற்றங்களையும் இலங்கை அரசு மீதும், தமிழீழ விடுதலைப்புலிகள் மீதும் சுமத்திய போதும் – தண்டனையை மட்டும் விடுதலைப்புலிகளுக்குக் கொடுத்துள்ளனர். அப்படியெனின், அரசு என்றால் எவ்விதமான பயங்கரவாத செயல்களிலும் ஈடுபடலாமா? எண்பதாயிரத்துக்கும் அதிகமான ஈழத்தமிழ் மக்கள் கழுத்தில் சுருக்கிட்டுத் தாமே உயிரை மாய்த்தனரா? இவ்வளவு தொகையான மக்களைக் கொன்றொழித்தது பயங்கரவாதமில்லையா? உலகத்தில் அரசு செய்வதெல்லாம் செய்யலாம். அது அவரவர் பெரும்பான்மையைப் பொறுத்துள்ளது என்பது போல, சிங்கள பேரினவாத அரசின் செயல்களையும் ஐரோப்பிய ஒன்றியம் அங்கீகரித்துள்ளதா?



# மீள் பரிசீலனைக்குள்ளாகவேண்டிய ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை விதிப்பு

ஐரோப்பிய ஒன்றியம் தமிழீழ விடுதலைப்புலிகளை ஐரோப்பாவுக்குள் வருவதற்குத் தடை விதித்துள்ளமை பற்றி அண்மையில் பரவலாகப் பேசப்பட்டது. இதன்போது ஒரு பெரும் பட்டிமண்டபத்தில் தர்க்கம் நடைபெற்றதெனக் கூறக்கூடிய வகையில் பல கருத்துக்கள் முட்டி மோதின.

விடுதலைப்புலிகளுக்கான பயணத்தடையினை ஏற்படுத்துவதில் இலங்கை அரசினால் லண்டனுக்கு அனுப்பி வைத்த குழுவொன்றும் செயற்பட்டு வருவதாகச் செய்திகள் வெளியாகின.

இந்தப் பயணத்தடைக்கான காரணம் எனப் பல்வேறுபட்ட விடயங்கள் கூறப்பட்ட போதும், குறிப்பிட்டுக் கூறியது சிறுவர்களைப் படையில் இணைப்பது மற்றும் படுகொலைகள் என்பனவாகும். இந்த இடத்தில் தான் சில உண்மைகளை ஐரோப்பிய ஒன்றியத்துக்கு எடுத்துச் சொல்ல வேண்டியுள்ளது.

சிறுவர்கள் போர்ப்பயிற்சி பெற்று, களமாடியது உண்மை தான். அப்படியான குறிப்பிட்ட தொகையினர் போராளிகளாக இருந்தனர். ஆனால், கடந்த பல ஆண்டுகளுக்கு முன்னரே விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் மிக முக்கியமானதும், மிக அவசியமாகவும் நடைமுறையில் இருக்கவேண்டிய அறிவிப்பொன்றைச் செய்தார். அதாவது பதினெட்டு வயதுக்குக் குறைவான வயதுடைய சிறுவர்களைஇணைக்கக்கூடாதென்று. இதனால் வயதைக் கூட்டிக் கூறி, போராளிகளாக இணைவோரை விசாரித்தறிந்து, பெற்றோரிடம் சேர்த்து வருவது தெரியாதவொரு விடயமல்ல வென்றே சொல்லலாம்.

சர்வசேத சமூகம் சிறுவர்களில் அக்கறை கொண்டு செயற்படுவது வரவேற் கத்தக்கதே. ஆனால், ஈழத்தமிழ் சிறுவர்களில் எவ்வாறான அக்கறை கொண்டுள்ளீர்களென ஐரோப்பிய ஒன்றியத்தினரைப் பார்த்துக் கேட்கவேண்டியுள்ளது. காரணம் - இலங்கை அரச படையினர் பல சிறுவர்களைக் கைது செய்து, காணாமற்போகச் செய்துள்ளனர். சுடுகலன்களால் சுட்டும், எறிகணைகளால் எகிறியும், குண்டுவீச்சு விமானங்களால் குண்டுகளை வீசியும், ஏன் கூரிய ஆயுதங்களால் வெட்டியும் ஆயிரக்கணக்கான சிறுவர்களைக் கொன்றொழித்துள்ளனர். உண்மையில் சிறுவர்களின் உரிமை என்று ஐரோப்பிய ஒன்றியம் பார்த்துச் செயற் படுவதாயிருந்தால், ஈழத்தமிழ் சிறுவர்களை இலங்கை அரச படையினர் கொன் றொழித்ததற்கு எத்தனை தடவைகள் இலங்கை அரசாங்கத்தைச் சேர்ந்தவர்களுக்குப் பயணத்தடை விதித்திருக்கவேண்டும்?

இன்னுமொரு விடயத்தைக் கூறியாக வேண்டும். இன்றும் பாருங்கள் பல சிறுவர்கள் போராட்டத்தில் இணைய முன் வருகின்றார்கள். இவர்களிடம் நீங்கள் என்ன காரணத்துக்காகப் போராட்டத்தில் இணைய வருகிறீர்களெனக் கேட்டால், அவர்கள் கூறுவது ஆச்சரியமாக இருக்கும். எமது பாதுகாப்புக்காகத் தான் பயிற்சியெடுக்க வருகிறோம் எனக் கூறுவார்கள். ஒரே வார்த்தையில் அவர் கள் கூறுவதற்குள்ளிருக்கம் அர்த்தங்களோ அதிகமானதாகும்.

என்னுடைய அக்காவையோ, தங்கையையோ, அம்மாவையோ அரச படையினர் பாலியல் ரீதியாக துன்புறுத்தவோ, வன்புணர்ச்சி கொள்ளவோ, உளரீதியாகத்துன்புறுத்தவோ கூடாது. அண்ணனையோ, தம்பியையோ, தந்தையையோ கைது செய்து காணாமற்போகச் செய்யவோ, படுகொலை செய்யவோ கூடாது. எம்மைச் சுதந்திரமாக வாழவிட்டால் ஏன் நாம் போராளிகளாக வேண்டுமென பதில் கேள்வியும் கேட்பார்கள்.

தடை அது - இதென ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்தலைச் செய்வதற்கு முன்னர், சரியான ஆய்வினைச் செய்யவில்லை போலவுள்ளது. இதனைக் கேட்பார் புத்தி செயலாக நோக்க வேண்டியுமுள்ளது.

உலகத்திலேயே சிறார்களுக்கு முக்கிய இடமும், மதிப்பும் கொடுக்கப்படுவது விடுதலைப் புலிகளால் விடுவிக்கப்பட்ட பிரதேசத்திலெனக் கூறுவதை மட்டும் கேட்காமல் நேரடியாகவும் சென்று பாருங்கள் உண்மை புரியும்.

எந்தச் சிறுவரும் சுதந்திரமாக நட மாடமுடியும். இலங்கை அரசு பொருளாதாரத் தடை விதித்திருந்தவேளையில், போசாக்கின்மையால் சிறுவர்கள் நலிவடைந்த போது அவர்களின் நலன்கருதி உள்ளூர் உற்பத்திகளைக் கொண்ட போசாக்கான உணவுகளைத் தயாரித்து வழங்கியது தொடக்கம், கல்வி கற்பதற்கான வசதிகளையும் இயலுமானவரை செய்து கொடுத்துள்ளனர். போரின் போது அரச படையினரின் திட்டமிட்ட இன அழிப்பினால் பெற்றோரை இழந்த, ஆதரவற்ற சிறார்களைப் பராமரிப்பதற் கென்ற பல இல்லங்கள் உள்ளன. இவற்றில் பாராமரிக்கப்படும் சிறார்களை சர்வதேச தொண்டு நிறுவனங்களே பல முறை பாராட்டியுள்ளன. பசி, பட்டினியென கையேந்தி வீடுகளில் அலைந்து திரியும் சிறுவர்களைக் காணமுடியாது. எந்தவொரு வீட்டு வேலைகளுக்கும் சிறுவர்களை எவரும் வைத்திருந்ததில்லை. மேற்கு நாடுகள் போல் சிறுவர்கள் கைகளில் ஆயுத மேந்தி, சக மாணவர்களின் உயிரை அழித்த வரலாறுமில்லை. சிறுவர் துஷ்பிரயோகம் என்பது உலகில் தலைவிரித்தாடுகிறது. விடுதலைப்புலிகளால் விடுவிக்கப்பட்ட தமிழர் தாயகப் பிரதேசத்தில் சிறுவர்கள் பாலியல் ரீதியாகத் துன்புறுத்தப்படுகின்றனர் என்ற கதைக்கே இடமில்லை. தென்னிலங்கையில் கடற்கரையோரம் பல உல்லாச விடுதிகளில் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்கதையாகவுள்ளன. இங்கு உல்லாசப் பயணிகளாக வந்து, பணத்தைக் காண்பித்து சிறுவர்களை சீரழிப்பவர்களைப் பற்றி யாரும் அறிக்கை சமர்ப்பித்தது கிடையாது. இந்தச் சூழலில் சிறுவர்களின் உரிமைகளை மதிப்பவர்களாகவுள்ள விடு தலைப்புலிகளின் ஐரோப்பாவுக்கான பயணத்தடை ஈழத் தமிழர்களுக்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் மனிதநேயம் பற்றிய சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதே உண்மையாகும்.

படுகொலைகள் என்ற விவகாரத்தை நோக்குகின்ற போது, ஐரோப்பிய ஒன்றியம் குறைகளையும், குற்றங்களையும் இலங்கை அரசு மீதும், தமிழீழ விடு தலைப் புலிகள் மீதும் சுமத்திய போதும்- தண்டனையை மட்டும் விடுதலைப் புலிகளுக்குக் கொடுத்துள்ளனர். அப்படியெனின், அரசு என்றால் எவ்விதமான பயங்கரவாத செயல்களிலும் ஈடுபடலாமா? எண்பதாயிரத்துக்கும் அதிகமான ஈழத்தமிழ் மக்கள் கழுத்தில் சுருக்கிட்டுத் தாமே உயிரை மாய்த்தனரா? இவ்வளவு தொகையான மக்களைக் கொன்றொழித்தது பயங்காரவாதமில்லையா? உலகத்தில் அரசு செய்வதெல்லாம் செய் யலாம். அது அவரவர் பெரும்பான்மையைப் பொறுத்துள்ளது என்பது போல, சிங்கள பேரினவாத அரசின் செயல்களையும் ஐரோப்பிய ஒன்றியம் அங்கீகரித்துள்ளதா?

அறிவாளிகளையும், பத்திரிகையாளர்களையும், மாணவர்களையும் அழித்தொழித்துக் கொண்டு சமாதானம் பேசி போராளிகளையும் படுகொலை செய்வதை வெறுமனே பார்த்தக் கொண்டிருக்கச் சொல்லியா பயணத்தடை?


சமாதானம், அமைதி பற்றிய அக்கறையுடனான செயற்பாடாகவும் இதனை நோக்க முடியாது. காரணம் இனமுரண்பாடுகளை அதிகரித்துக் கொள்வதிலும், ஈழத்தமிழின அழிவை மட்டுமே குறிக்கோளாக வைத்துள்ளவர்களை விட்டுவிட்டு, அவர்களுக்கு நிரந் தரத்தீர்வை ஏற்படுவத்துவதற்கான எந்த விதமான அழுத்தத்தையும் கொடுக்காது, தனியே நியாயமான விடுதலைப் போராட்டத்தை நடத்தும் ஈழத்தமிழரை இலக்குவைப்பது, அழுத்தம் கொடுப்பது எந்தச் சூழ்நிலையிலும் வரவேற்கத்தக்க தல்ல. இதனை எந்தவிதத்திலும் நியாயப் படுத்த முடியாது.

உலக உருண்டையில் சிறிய தேசமொன்றில் லட்சக்கணக்கானவரான ஈழத்தமிழ் மக்களின் சுதந்திர வாழ்வுக்கான போராட்டத்தை சமாதானம் பேசிக் கொண்டு அழிக்கலாமென எண்ணிச் செயற்படும் பேரினவாதிகளுக்கு ஆதரவு கொடுப்பதாக அமைந்துள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் அறிவிப்பு மீள்பரிசீலனை செய்யவேண்டிய ஒன்றாகும்.

பல சங்கங்கள், அமைப்புக்கள் அமைத்து புலம் பெயர்ந்து வாழும் எமதுறவுகளே இறுதியாக உங்களிடம் ஒரு வேண்டுகோள். நான் இங்கு சிறு குறிப்பாகவே சில விடயங்களைத் தெரிவித்துள்ளேன். ஆகவே.... நீங்கள் ஏன் இந்த விவகாரத்தில் கவனஞ் செலுத்தக்கூடாது?

கனகரவி.

# சிறார்களின் அபிவிருத்தி குறித்த சிந்திப்புகள்....



சிறுவர்களின் மேம்பாடு தொடர்பாக அவர்களின் கடந்த கால சமகால நிலைகளைச் சற்று சிந்தித்து திரும்பிப்பார்த்து ஆராய வேண்டியவாரம் இதுவாகும்.

இது உலக சிறுவர் வாரம். சர்வதேச ரீதியில் சிறுவர்களின் மேம்பாடு தொடர்பாக சிந்தித்து, ஆக்கபூர்வமான செயற்திட்டத்தை முன்னோக்கி சிந்தித்து நகர்த்துவதற்காக அங்கீகரிக்கப்பட்ட வாரம்.

உலக நாடுகளில் இன்று சிறுவர்களைப் பற்றி சிந்தித்து, அது தொடர்பான பணிகளை முன்னெடுத்து வருகின்ற சூழலில் நாம் தமிழர் தாயக சிறார்களைப் பற்றிய சிந்தனையை ஒரு முறை தூண்டி விடுவது தான் இந்த பத்தியின் நோக்கம்.

தாயகத்தின் கரையோர மாவட்ட சிறார்களின் வாழ்வியல், கல்வியியலைப் பற்றி இப் பொழுது ஒரு பலத்த கேள்வி எழுந்திருக்கிறது. ஏனென்றால்– இவர்கள் தான் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்கள். சுனாமி அனர்த்தத்தின் பின்பு முதலாவது சிறுவர் வாரம் இதுவாகும்.

ஆயிரக் கணக்கான சிறார்களை கடற்கோள் தனக்குள் இழுத்துச் சென்ற பின்னர் எஞ்சியிருக்கின்ற சிறார்களின் நிலை பற்றிய சிந்தனையும், அவர்களின் உடல் உள ஆரோக்கிய செயற்பாடுகளும் மிக அவசியமாகிறது.

தாயை விட்டு ஒரு நிமிடம் கூட பிரிந்திராத பிஞ்சு மனங்கள் இன்று அண்ணளவாக ஒருவருடமாக பெற்றோரே இல்லாமல் வாழ்ந்து வருகின்ற ஒரு சூழலைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இது ஒருபுறம் இருக்க - ஏனைய பிர தேசங்களில் உள்ள சிறுவர்களின் நிலை யையும் மிகச் சாதாரணமாக பார்த்துவிட முடியாது. போருக்குள் வாழ்ந்த ஒரு சமூகம் கடந்த 3½ ஆண்டுகளில் வெடிச்சத்தங்களைக் கேட்காத நிலையில், அவர்களில் ஒட்டுமொத்த சமூகம் சார்ந்த அம்சங்கள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டதாகவும் எண்ணிவிட முடியாது.

இந்தப் போர் அற்ற, வெடிச் சத்தங்கள் அற்ற ஒரு சூழலில் சிறார்களின் எண்ணங்களை, அவர்களின் சுயதேவைகளை, நிறைவேற்ற முடியாத பல குடும்பங்களை நாங்கள் காண்கிறோம்.

எனவே, சிறார்களின் உடல், உள ஆரோக்கிய செயற்பாடுகளில் மேலெழுந்தவாரியான வாய்ப்பாடுகளை சொல்லுகின்றவர்கள் அல்லது வலியுறுத்துகின்ற நிறுவனங்கள் மற்றும் ஒன்றியங்கள் மேற்குறிப்பிட்ட

அசிதன்.



விடயத்தைப் பற்றி சிந்தித்தாலும், அவர்களால் முழுமையான செயற்பாட்டின் இலக்கை எட்டமுடியவில்லை என்பதையும் சுட்டிக்காட்டியே ஆக வேண்டும்.

உள்ளூர் நிறுவனங்களுடன் இணைந்து பல அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்களும் இந்த சிறுவர் நலன் செயற்பாடுகளை முன் னெடுத்தாலும், சிறுவர் நலனை அவர்களின் அபிவிருத்தியைப் பற்றி மட்டுமே சிந்தித்து செயலாற்றுவதற்கு சில நிறுவனங்கள் முன் வந்தாலும், அவை தங்களுடைய வரையறை களோடு நின்று விடுகின்ற சந்தர்ப்பங்களை மட்டுமே அதிகமாகக் காணக்கூடியதாக இருக் கின்றது.

எனவே, முழுமையான சிறுவர் அபி விருத்தி மேம்பாடு என்பதை இந்த வரைய றைக்குள் காண்பது மிகக் கடினம்.

எனவே, சிறார்களின் வாழ்க்கைத் தரத் துக்கு ஏற்ப அவர்களின் முழுமையான உடல், உள ஆரோக்கியத்துக்கான செயற்பாடுகளுக்கான ஒரு திருப்திகரமான முழுமையான நிகழ்ச்சித்திட்டம் அவசியமாகிறது.

இந்த நிகழ்ச்சித் திட்டத்துக்கான உருவாக் கம் என்பது இலகுவானதாக இருந்தாலும், இதனை செயற்படுத்துவதற்கான நிதி மூலத்தை இனங் காண்பது தான் இன்று இருக்கின்ற பாரிய பிரச்சினையாகவும் இருக்கிறது.

சிறுவர்களின் மேம்பாட்டுச் செயற்பாடு களில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் கணிசமான அளவில் பங்கெடுக்கிறது. இருப்பினும் இதனை முழுமைப் படுத்துவதற்கான நிதி பற்றாக்குறை என்பது இப்பொழுதும் தடைகளை ஏற்படுத்தி வருகிறது.

குறிப்பாக சிறார்களின் வளர்ச்சியில் முன்பள்ளிகள் கணிசமான அளவில் பங்கேற்கின்றன. இதனை மறுப்பதற்கில்லை என்றாலும், அவையும் தமக்கு வரையறுக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை முழுமையாகச் செயற்படுத்த நிதி மீண்டும் ஒரு பின்னடைவை ஏற்படுத்தி நிற்கின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தைப் பொறுத்தளவில் - தற்போது 176 முன் பள்ளிகள் இருப்பதாக தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் புள்ளி விபரம் தெரிவிக்கின்றது. இந்த 176 முன்பள்ளிகளிலும் சுமார் 7496 சிறார்கள் முன் பள்ளிக் கல்வியை கற்கின்றனர். இந்த முன்பள்ளிகளில் 273 ஆசிரியர்கள் கற்பிக்கின்றனர்.

கிளிநொச்சியில் இருக்கின்ற பெரும்பாலான முன்பள்ளிகள் இன்று நிரந்தர கட்டட வசதிகளற்ற நிலையில் இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.


முன்பள்ளி சூழலில் மகிழ்ச்சிகரமாக கற்றலுக்கான விளையாட்டு முற்றம் சீரின்மை காணப்படுகிறது.

குறிப்பாக இந்த முன்பள்ளி ஆசிரியர்க ளுக்கான கொடுப்பனவு என்ற விடயத்தில் ஒரு திருப்தியற்ற நிலை காணப்படுகிறது.

இவ்வாறு சிறார்களின் வளர்ச்சி என்பதற்கு புறச்சூழலில் இருக்கின்ற அடிப்படை விடயங்களில் தீர்வு காணப்படாத வரை சிறார்களின் அபிவிருத்தியிலும் ஒரு பின்னடைவைச் சமூகம் எதிர்கொள்ளத்தான் வேண்டும்.

தமிழர் புனர்வாழ்வுக்கழகம் ஆரம்பபிள்ளை அபிவிருத்திப் பிரிவு முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையம் என்ற கட்டமைப்புகளை தனக்குள் வைத்திருக்கின்ற நிலையில், இந்த கட்டமைப்புகளே இந்தச் சிறார்களின் மேம் பாட்டுக்குத் தீர்வை வழங்குகின்ற சாதனமாகத் திகழ்கின்ற காரணத்தால், இந்தக் கட்டமைப்புக் குட்பட்டவர்களின் கைகளில் தான் தாயக சிறார் களின் உடல், உள மேம்பாடு தங்கியிருக்கின்றது.

# மத்திய அமெரிக்க நாடுகளில் இயற்கை சீற்றத்தால் பெரும் அழிவு



கௌதமாலா —

மத்திய அமெரிக்க நாடுகளான எல்சல்வடோர், கௌதமாலா, மெக்ஸிக்கோ போன்ற நாடுளில் வீசிய சூறாவளி, அதன்பின் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு, மண்சரிவு போன்றவற்றால் 230 இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தது டன், பலர் காணாமற் போயுள்ளதாகவும், பெருமளவு சொத்தழிவு ஏற்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவித்தன.

கௌதமாலா நகரமொன்றிலிருந்து 40 பேரின் உடல்கள் மீட்புக்குழுவினரால் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இங்கு மொத்தமாக 120 பேர் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கௌதமாலா ஜனாதிபதி, சம்பவம் இடம் பெற்ற பகுதிகளை ஹெலிகொப்டர் மூலம் பார்வையிட்டுள்ளார். அத்துடன், அவசரகால நிலையை பிரகடனப்படுத்த அனுமதிக்குமாறு காங்கிரஸை கேட்டுள்ளார்.

எல்சல்வடோரில் சுமார் 54 ஆயிரம் மக்கள் இடம்பெயர்ந்துள்ளதாகவும், 370 தற்காலிக குடியிருப்புகள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர். தற்போது மழை நின்று, சூரிய வெளிச்சம் பரவத் தொடங்கினாலும், ஆபத்தான நிலை தொடர்ந்து கொண்டிருப்பதாக எல்சல்வடோர் செஞ்சிலுவைச் சங்க பேச்சாளர் கார்லஸ் லொபேஸ் மென்டோஸ் தெரிவித்தார்.

மெக்ஸிக்கோவிலும், பாதிப்பு ஏற்பட்டுள்ளது. 10 பேர் உயிரிழந்துள்ளனர். 30 ஆறுகளில் வெள்ளம் கரைபுரண்டோடுகின்றது. பாதிக்கப்பட்டவர்களுக்கான 200 மெற்றிக் தொன் உணவு வகைகளையும், 30 மெற்றிக் தொன் அவசரகால பொருட்களையும் வழங்குவதற்கு விமானப்படையினர் தயாராகி வருவதாக மெக்ஸிக்கோ அதிகாரிகள் தெரிவித்தனர்.

# தொழுகையில் ஈடுபட்டோர் மீது பாகிஸ்தானில் திடீர்தாக்குதல்

## 8 பேர் பலி; 20இற்குமேல் காயம்

இஸ்லாமாபாத் —

பாகிஸ்தானில் பள்ளிவாசலொன்றில் நேற்று தொழுகையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவர்கள் மீது இனந்தெரியாத ஆயுதபாணிகள் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் எட்டுப் பேர் கொல்லப்பட்டதுடன் 20 பேர் காயமடைந்ததாக பாகிஸ்தான் பொலிஸார் தெரிவித்தனர்.

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்திலுள்ள சிறுபான்மை அகமதியா முஸ்லிம்களின் பள்ளிவாசல் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

மோட்டார் சைக்கிள் ஒன்றில் வந்த மூன்று ஆயுதபாணிகள் திடீரென பள்ளிவாசலருகே சென்ற பின்னர், இருவர் தொழுகையில் ஈடுபட்டவர்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டதாக பொலிஸ் அதிகாரி



மொகமட் அரீவ் தெரிவித்தார்.


அப்பாவிப் பொதுமக்கள் மீது நடத்தப்படும் எந்தவொரு தாக்குதலையும் தாம் வன்மையாகக் கண்டிப்பதாக பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் அப்ரல் சேபயோ தெரிவித்துள்ளார்.

1974 ஆம் அண்டு பாகிஸ்தான் அரசியலமைப்பின்படி அகமதியா சிறுபான்மை இனத்தவர்கள் முஸ்லிம் அல்லாதவர்களென பிரகடனப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சதாமை உயிருடன் விட்டால் தாக்குதல் நிறுத்தப்படுமாம்

## கிளர்ச்சிவாதிகள் நிபந்தனை விதிப்பு

கெய்ரோ —



ஈராக்கில் தாக்குதல் நிறுத்தப்பட வேண்டுமானால் சதாம் தூக்கிலிடப் படமாட்டார் என உறுதியளிக்கப்பட வேண்டும் என்று அவரின் ஆதரவு தீவிரவாதிகள் நிபந்தனை விதித்துள்ளனர். இது தொடர்பாக அவர்கள் அமெரிக்காவுடன் பேச்சு வார்த்தை நடத்த முற்பட்டுள்ளதாகவும் ஈராக் ஜனாதிபதி ஜலால் தலபானி கூறியுள்ளார்.

ஈராக் புதிய ஜனாதிபதி ஜலால் தலபானி எகிப்து பத்திரிகை ஒன்றிற்கு அளித்த பேட்டியில் -

2003ஆம் ஆண்டில் அமெரிக்கப் படையினரால் வெளியேற்றப்பட்ட சதாம் ஆதரவாளர்களே தற்போது ஈராக்கில் நடக்கும் தாக்குதலுக்கும் பின்னணியில் உள்ளனர். தாக்குதலை நிறுத்த வேண்டுமெனில் சதாமுக்குத் தூக்கு தண்டனை கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிற வழக்கு விசாரணையை நிறுத்த வேண்டுமென நிபந்தனை விதிக்கின்றனர். இது தொடர்பாக அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்தவும் முயற்சிக்கின்றனர் என்றார்.

சதாமை விசாரிக்க ஈராக்கில் சிறப்பு நீதிமன்றம் அமைக்கப்பட்டுள்ளது. மனிதாபிமானத்துக்கெதிராக செய்த குற்றங்களுக்காக எதிர் வரும் 19ஆம் திகதி சதாம் விசாரிக்கப்படுவார்.

ஈராக்கில் 1982இல் 143 பேர் படுகொலை செய்யப்பட்டது தொடர்பாக - சதாம், ஈராக்கின் முன்னாள் துணை அதிபர் மற்றும் சதாமின் உறவினர் உட்பட ஆறுபேரிடம் விசாரணை நடத்தவுள்ளதாக சிறப்பு நீதிமன்றம் தெரிவித்துள்ளது. இதில் குற்றம் நிரூபிக்கப்பட்டால் சதாமுக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

# உகண்டா கிளர்ச்சிவாத தலைவர்கள் ஐவரை கைதுசெய்யுமாறு சர்வதேச நீதிமன்று உத்தரவு


உகண்டா கிளர்ச்சிவாதக் குழுவின் (L.R.A) ஐந்து தலைவர்களைக் கைதுசெய்வதற்கான பிடியாணையைச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் விடுத்துள்ளது.

இவ்வாறு கைதுசெய்யப்படுபவர்களின் பெயர்களை நீதிமன்றம் வெளியிடவில்லையாயினும், கிளர்ச்சிவாத குழுவின் தலைவரான ஜோசப் கோனியும் கைது செய்யப்படுவோர் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிறுவர்களை கடத்துவது, பாலியல் வல்லுறவில் ஈடுபடுவது உட்பட பல்வேறு குற்றச் செயல்களை, இந்தக் கிளர்ச்சிவாத குழு கடந்த 20 வருடங்களுக்கும் மேலாக நடத்தி வந்ததாக சர்வதேச மனித உரிமைகள் ஆணைக்குழு குற்றம் சாட்டி வந்தது. சர்வதேச நீதிமன்றத்தின் இந்த உத்தரவை வரவேற்றுள்ள ஆணைக் குழு இது ஒரு வரலாற்று ரீதியான முக்கியத்துவமான தீர்ப்பெனத் தெரிவித்துள்ளது.

உகண்டாவின் வடபகுதியில் இடம்பெற்று வரும் வன்செயல்களை விசாரணை செய்யுமாறு உகண்டா அரசு சர்வதேச நீதிமன்றிடம் கடந்த வருடம் கோரிக்கை விடுத்திருந்து.

கைது செய்வதற்கான பிடியாணையை சர்வதேச நீதிமன்றம் விடுத்ததன் மூலம் நடை



பெற்றுவரும் சமாதானப் பேச்சுவார்த்தை முடிவிற்குக் கொண்டுவரப்படுமென பி.பி.ஸியின் வில் றோஸ் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நீதி மன்றம் இவ்வாறானதொரு தீர்ப்பை இதற்கு முன்னர் வெளியிடவில்லையென சர்வதேச நீதிமன்றின் நிகழ்ச்சித் திட்ட இயக்குநர் றிச்சட் டிக்கர் தெரிவித்தார்.

அத்துடன் உகண்டாவின் வடக்குப் பகுதியில் படையினர் பொது மக்களுக்கு எதிராக மேற்கொண்டதாகக் கூறப்படும் வன்செயல்கள் குறித்தும் நீதிமன்றம் விசாரிக்குமெனவும் அவர் தெரிவித்தார்.




## உலக வர்த்தக மையத்தாக்குதலுக்குப்பின்

# அமெரிக்காவில் தாக்குதல் நடத்த அல்கொய்டா பத்து தடவை முயற்சி

வொஷிங்டன் —

உலக வர்த்தக மையம் மீது 2001ஆம் ஆண்டு தாக்குதல் நடத்திய பின்பு மீண்டும் தாக்குதல் நடத்த அல் கொய்டா தீவிரவாதிகள் 10 தடவை முயற்சி செய்தனர். ஆனால் அவர்களின் அந்த முயற்சி முறியடிக்கப்பட்டுவிட்டதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் வொஷிங்டனில் நடந்த நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்டு பேசுகையில் தெரிவித்தார். அங்கு அவர் கூறியதாவது -

அல்கொய்டா தீவிரவாதிகள் உலகம் முழுவதும் தங்கள் கைவரிசையை காட்டி வருகிறார்கள்.

கடந்த 2001ஆம் ஆண்டு நியூயோர்க்கில் உள்ள வர்த்தகமைய கட்டடத்தைத் தகர்த்த பின்பு மீண்டும் அது போன்ற தாக்குதலை நடத்தத் திட்டமிட்டனர்.

இதுவரை 10 முறை இந்தத் தாக்குதல் முயற்சி நடந்தது. ஆனால் அந்த முயற்சிகள் முறியடிக்கப்பட்டுவிட்டன.

ஈராக் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தியது சரியான நடவடிக்கைதான். ஈராக் மீது தாக்குதல் நடத்த வேண்டும் என்பது கடவுளின் கட்டளை.

சிரியா, ஈரான் போன்ற நாடுகள் ஈராக் தீவிரவாதிகளுக்கு உதவிசெய்து வருகின்றன எனத் தெரிவித்தார்.

இதேவேளை, அல்கொய்டா தலைவர் பின் லேடன், ஈராக்கில் உள்ள அல்கொய்டா தலைவர் அபு முசாப் அல் சர்காவி ஆகியோர் பற்றி தகவல் கொடுத்தால் 90 கோடி ரூபா வழங்கப்படுமென்று அமெரிக்கா ஏற்கனவே அறிவித்திருந்தது. தற்போது துல் மாட்டின் என்ற அமர் உஸ்மான் பற்றி தகவல் கொடுத்தால் 46கோடி ரூபா பரிசு வழங்கப்படும் என்றும் அமெரிக்கா அறிவித்துள்ளது.

# சொந்த இடத்திற்கு திரும்பும் நியூ ஓர்லியன்ஸ் மக்கள்

நியூஓர்லியன்ஸ் —

கத்ரீனா சூறாவளியால் கடுமையாக பாதிக்கப்பட்ட அமெரிக்காவின் நியூ ஓர்லியன்ஸ் நகர மக்களில் சிலர் நீண்ட நாட்களுக்குப் பின்பு நேற்று முன்தினம் தங்கள் வீடுகளுக்கு திரும்பினர். ஆனால், வீடுகள் சேதமடைந்திருப்பதாலும், குடிநீர் வசதி இல்லாததாலும் பலர் அங்கு தங்க முடியாது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவில் லூசியானா மற்றும் டெக்சாஸ் மாகாணத்தை கத்ரீனா சூறாவளி தாக்கியது. இதில் நியூ ஓர்லியன்ஸ் நகரம் பெரிதும் பாதிக்கப்பட்டது. நகர் முழுவதும் வெள்ளம் சூழ்ந்தது. ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இதில் இறந்தனர். ஏராளமான வீடுகளும் சேதமடைந்தன. முன் எச்சரிக்கை நடவடிக்கையாக இங்கு வசித்த ,பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டனர். கத்ரீனா சூறாவளி தாக்குதல் நடந்த பல நாட்களுக்குப் பின் தற்போது நியூஓர்லியன்ஸ் நகருக்கு பொதுமக்கள் திரும்பத் தொடங்கியுள்ளனர். பொலிஸ் மற்றும் இராணுவத்தினரால் வைக்கப்பட்டிருந்த தடுப்புகளும், சோதனைச் சாவடி மையங்களும் நகரத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்டு வருகிறது. நகரம் முழுவதும் குப்பைகள் மலைபோல் குவிந்துள்ளன. தண்ணீரில் அடித்துச்செல்லப்பட்ட பொருட்கள் சிதறிக்கிடக்கின்றன.

நியூஓர்லியன்ஸ் நகர மேயர் ராய் நஜின் கூறும்போது - சூறாவளி தாக்குதலுக்கு முன்பு இங்கு நான்கு லட்சத்து 55 ஆயிரம் பேர் வசித்து வந்தனர். இதில் 80 ஆயிரம் பேர் இங்கு திரும்பிவிட்டனர். இன்னும் இரண்டு லட்சம் பேருக்கு இங்கு தங்குவதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்படும். சூறாவளியின் தாக்குதலுக்கு ஆளாகி பின்பு சிதறி ஓடிய பொதுமக்களுக்கு உடனடியாகத் தேவையான வசதிகளைச் செய்துகொடுக்க முடியாது. நீருக்கு அடியில் ஏராளமான பொருட்கள் மூழ்கியுள்ளன. ஒரு வாரத்திற்குள் இவற்றை அப்புறப்படுத்த முடியாது. வீட்டை விட்டு வெளியேறியவர்கள் இதற்காக சில நாட்கள் காத்திருக்க வேண்டும் என தெரிவித்தார்.

தற்போது சிலர் மட்டும் நியூ ஓர்லியன்ஸிற்கு திரும்பியுள்ளனர். ஏராளமான வீடுகள் சேதமடைந்திருப்பதாலும், போதிய குடிநீர் வசதி இல்லாததாலும் இன்னும் பலர் திரும்பாமல் உள்ளனர்.

## ஈராக்கில் நடத்தப்படும் தாக்குதல்கள்

# மக்களிடமிருந்து தம்மை அந்நியப்படுத்துமென அல்கொய்டாவின் 2ஆவது தலைவர் தெரிவிப்பு




பாக்தாத் —

ஈராக்கில் நடத்தப்படும் தாக்குதல்கள் அங்குள்ள மக்களை தம்மிடமிருந்து அந்நியப்படுத்தி விடுமென அல்கொய்டாவின் இரண்டாவது தலைவர் அய்மான் அல்சாவாகிரி ஈராக்கிற்கு பொறுப்பான அல்கொய்டா தலைவர் அபுமுசாப் அல் சர்காவிக்கு எழுதிய கடிதம் மூலம் தெரிந்து கொண்டதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

பென்ரகன் பேச்சாளர் பிரைன் வைட்மன் ஊடகவியலாளர் மாநாட்டிலேயே இவ்வாறு தெரிவித்தார். எனினும் இந்தக் கடிதத்தை அவர் காட்டவுமில்லை. அதனை எவ்வாறு பெற்றுக் கொண்டதென கூறவுமில்லை. ஆனால் இந்தத் தகவல் மிகவும் நம்பிக்கையானதும் அண்மையில் பெறப்பட்டதெனவும் அவர் தெரிவித்தார்.

சவாகிரி தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாக வைற்மன் தெரிவித்ததாவது -

நாம் எமது அமைப்பின் பலமுக்கிய தலைவர்களை இழந்துள்ளோம். தகவல் தொடர்பு மற்றும் நிதியுதவி என்பன கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. ஈராக்கில் பணயக்கைதிகளாகப் பிடிக்கப்படுவோர் கொல்லப்படுவதும், பள்ளிவாசல்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்படுவதும் மக்களை எம்மிலிருந்து அந்நியப்படுத்திவிடும்.

ஈராக்கில் இஸ்லாமிய அரசொன்றை நிறுவி அதனை அயல் நாடுகளுக்கு பரவச்செய்வோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கடிதம் அராபிய மொழியில் எழுதப்பட்டுள்ளது. இது ஊடகங்களுக்கு கசிந்த பின்னர் அமெரிக்க அரசால் வெளியிடப்பட்டது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu

*The Leading Daily of Tamils' Homeland*

# மின்சாரம் தாக்கி குடும்பப் பெண் பலி!

## ஈவினையில் சம்பவம்

ஈவினை

புன்னாலைக்கட்டுவன் ஈவினைப்பகுதியில் குடும்பப் பெண் ஒருவர் மின்சாரம் தாக்கி பரிதாபகரமாக மரணமடைந்தார்.

இந்தச் சம்பவத்தில் புன்னாலைக் கட்டுவன் ஈவினையைச் சேர்ந்த பாலசுந்தரம் செல்வராணி (வயது 60) என்பவரே பரிதாபகரமாக மரணமடைந்தவர் ஆவார்.

மேற்படி பெண் தனது வீட்டில் உள்ள மின்சார ஆழி ஒன்றை தொட்டபோதே, மின்சார ஒழுக்கு காரணமாக மின்சாரம் தாக்கி பரிதாபகரமாக மரணமடைந்தார். இதேவேளை, மனைவி மரணமடைந்த துயரத்தினைத் தாங்கமுடியாத அவரது கணவர் பாலசுந்தரம் நஞ்சருந்தி தற்கொலை செய்ய முயற்சித்தார்.

இவர் உறவினர்களினால் காப்பாற்றப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மரணமடைந்த பெண்ணின் சடலம் யாழ்.போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

# மோட்டார் சைக்கிள் விபத்தில் மரணம்!

யாழ்ப்பாணம்

புங்குடுதீவு பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் உயிரிழந்த ஒருவரின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று மாலை ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதேயிடத்தைச் சேர்ந்த லோறன்ஸ் ஜெயரட்ணம் என்பவரே உயிரிழந்தவராவார்.

உயிரிழந்தவரின் சடலம் விசாரணைக்காக வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

# யாழ்.வந்த ஹையேஸ் வான் புத்தளத்தில் ரயிலுடன் மோதல்

## 3 பேர் படுகாயம்

யாழ்ப்பாணம்

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த ஹையேஸ் வான் புத்தளத்தில் ரயிலுடன் மோதி விபத்துக்குள்ளானதில் மூவர் படுகாயமடைந்தனர்.

புத்தளம் - பாலாவியில் உள்ள ரயில் கடவையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. நேற்றுமுன்தினம் அதிகாலை 12.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

கொழும்பிலிருந்து ஆறுபேருடன் வந்துகொண்டிருந்த ஹையேஸ் வான் மூடப்பட்டிருந்த ரயில் கடவையைத் தாண்டிச்சென்றபோதே இந்த விபத்து ஏற்பட்டது.

இந்த விபத்தில் வான் முற்றாகச் சேதமடைந்தபோதும் அதிலிருந்த மூன்று பேர் மட்டும் காயமடைந்ததுடன் ஏனையோர் அதிஷ்டவசமாகத் தப்பினர்.

தங்கராசா நகுலேஸ்வரன் (வயது 38) உடுப்பிட்டி, முருகேசு சபேஸ்குமார் (வயது 26) நெல்லியடி, செல்லத்துரை தினேந்திரதாஸ் (வயது 24) உடுப்பிட்டி ஆகியோரே காயமடைந்து புத்தளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகின்றனர். இதேவேளை, வானின் சாரதி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

## யாழ்....

கடையில் கொள்வனவு செய்துகொண்டு வீடுதிரும்பிக் கொண்டிருந்தபோதே மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்களால் சுடப்பட்டார். துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான இவர் அந்த இடத்திலேயே மரணமானார்.

இவர் கொழும்புத்துறைப் பகுதியில் உள்ள கோவில் ஒன்றின் தர்மகர்த்தாவாக இருப்பதாகவும், இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் பணியாற்றியவர் என்றும் தெரியவருகின்றது.

சம்பவ இடத்திற்கு சென்ற யாழ். மேலதிக நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரன் விசாரணைகளை மேற்கொண்டதுடன் மேற்படி நபரின் சடலத்தை வைத்தியபரிசோதனைக்கு உட்படுத்துமாறு உத்தரவிட்டார்.

## தேர்தல் களத்தில்...

நேற்று வேட்புமனுத்தாக்கல் செய்யவில்லை.

ஐக்கிய தேசியக்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் மேற்கொள்ளப்பட்ட பேச்சுக்கள் வெற்றியளித்ததையடுத்து தங்கள் கூட்டமைப்பின் ஆதரவை ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்குவதற்கு முஸ்லிம் தேசியக்கூட்டமைப்பு முடிவு செய்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க யானை சின்னத்தின் கீழும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷ வெற்றிலைச் சின்னத்தின் கீழும், ஐக்கிய லலித் முன்னணியின் வேட்பாளர் அனுர சரத் சில்வா அன்னப்பறவை சின்னத்தின் கீழும் -

தேசிய அபிவிருத்தி முன்னணியின் வேட்பாளர் அச்சல சுரவீர தேங்காய் சின்னத்தின் கீழும், ஐக்கிய இலங்கை பொதுஜனக் கட்சியின் வேட்பாளர் விக்டர் ஹெட்டிகொட்டி சில்வா கோப்பை சின்னத்தின் கீழும், ஐக்கிய ஜனநாயகக் கூட்டமைப்பின் வேட்பாளர் ஏ.கே.ஜயவீர ஆராச்சிலாகே கடதாசிகள் சின்னத்தின் கீழும், ருகுணு மக்கள் கட்சியின் வேட்பாளர் அருண சொய்ஸா கார் சின்னத்தின் கீழும் -

சோசலிச சமத்துவக்கட்சியின் வேட்பாளர் விஜே டயஸ் கத்தரிக்கோல் சின்னத்தின் கீழும், ஐக்கிய தேசிய மாற்று முன்னணியின் வேட்பாளர் சனத் தர்மத்வஜ கேட் சின்னத்தின் கீழும், புதிய இடதுசாரி முன்னணியின் வேட்பாளர் சமில் ஜயனெத்தி மேசை சின்னத்தின் கீழும், சிறிலங்கா முற்போக்கு முன்னணியின் வேட்பாளர் ஏ.ஏ.பி.நெல்சன் பெரேரா பூச்சாடி சின்னத்தின் கீழும் -

ஐக்கிய சோசலிச கட்சியின் வேட்பாளர் சிறிதுங்க ஜயசூரிய முச்சக்கர வண்டி சின்னத்தின் கீழும், இலங்கை தேசிய முன்னணியின் வேட்பாளர் விமல் கீகனகே துடுப்பாட்ட மட்டை சின்னத்தின் கீழும் போட்டியிடவுள்ளனர்.

நேற்றுக்காலை 11 மணிமுதல் 11.30 மணிவரை வேட்பாளர்கள் குறித்த ஆட்சேபனைகள் தெரிவிப்பதற்கான காலம் ஒதுக்கப்பட்டிருந்தது. வேட்பு மனுத்தாக்கல்செய்த எந்த வேட்பாளருக்கும் எதிர்ப்பு இல்லாததால் இவர்கள் அனைவரும் எதிர்வரும் தேர்தலில் போட்டியிடுவதாக அறிவிக்கப்பட்டது.

# தேர்தல் முறைகேடுகள் நடந்தால் மறு வாக்குப்பதிவு நடத்தப்படும்!

## தேர்தல் ஆணையாளர் எச்சரிக்கை

கொழும்பு

ஜனாதிபதித் தேர்தலின்போது எந்தவொரு வாக்களிப்பு நிலையங்களிலும் முறைகேடுகள் இடம்பெற்றால் - நவம்பர் 19 ஆம் திகதி மறு வாக்குப்பதிவு நடத்தப்படும். இவ்வாறான நிலை ஏற்படாமல் வேட்பாளர்கள் பார்த்துக்கொள்ள வேண்டும் என தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க கேட்டுக்கொண்டார்.

நேற்று நண்பகல் வேட்புமனுத் தாக்கல் முடிந்த பின்னர் செய்தியாளரிடம் பேசிய அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேர்தல் தினத்தன்று வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறாத வகையில் வேட்பாளர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக்கேட்டுக் கொள்கிறேன். ஏதேனும் ஒரு வாக்குச் சாவடியில் வாக்கு மோசடிகள் இடம்பெறுமானால், அந்த வாக்குச் சாவடியில் மறு வாக்குப் பதிவு நடத்தப்படும்.

இந்த மறுவாக்குப் பதிவு நவம்பர் மாதம் 19ஆம் திகதி நடத்தப்படும். இவ்வாறான நிலை ஏற்படாதவாறு வேட்பாளர்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, எதிர்க் கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் தமது சொத்து விபரங்களை சமர்ப்பித்துள்ளதாகவும், ஏனைய வேட்பாளர்கள் தமது சொத்து விபரங்களை சமர்ப்பிக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

தற்போது அமுலில் உள்ள சட்டத்தின்படி அரச ஊடகங்களை மட்டுமே கட்டுப்படுத்த முடியும். தனியார் ஊடகங்களுக்கு சில ஆலோசனைகள் மட்டுமே வழங்க முடியும். இந்தத் தேர்தலில் அரச உடைமைகளை பிரசார நடவடிக்கைகளிலோ அல்லது அது தொடர்பான வேறு விடயங்களிலோ பயன்படுத்த வேண்டாம்.

மேலும், அரச இலத்திரனியல் ஊடகங்களில் 45 நிமிடம் பிரசார நடவடிக்கைகளுக்கு நேரம் ஒதுக்கப்படும். 2004 ஆம் ஆண்டின் வாக்காளர் பட்டியலுக்கமையவே இந்த ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும். எதிர்வரும் 12 ஆம் திகதி தேர்தல் செயலகத்தில் ஜனாதிபதி வேட்பாளர்களுடன் முக்கிய கலந்துரையாடல் ஒன்றையும் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (01)

## இயன்...

13 ஆம் திகதி முற்பகலில் சு.ப.தமிழ்ச்செல்வன் தனித்தனியாக பேச்சுகளை நடாத்தவுள்ளார்.

## வாழைச்சேனை...

இந்தத் தாக்குதலை நடத்திவிட்டு தப்பிச்சென்றதாக அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

## இந்தியப்...

லெப்.ஜெனரல் சாந்த கொட்டேகொடவைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தினர்.

இந்தச் சந்திப்பின்போது பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக விரிவாக ஆலோசனைகளை நடத்தியதாகவும் தெரியவருகிறது.

இந்திய பாதுகாப்பு சேவைகள் அதிகாரிகள் கல்லூரியைச் சேர்ந்த பிரதான வழிகாட்டுநர் மேஜர் ஜெனரல் கே.எல்.சிவகுமார் கொமாண்டர் சர்துல் ரதேரா விங் கொமாண்டர் கே.பி.எஸ்.விர்க் ஆகியோரே இந்தச் சந்திப்பில் பங்கேற்றனர்.

இவர்கள் பல்வேறு இராணுவத் தளங்களுக்கும் விஜயம்செய்து பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக ஆராய்ந்ததாகவும் தெரியவருகிறது.

## சமாதானத்...

பகிர்ந்தளிக்கப்படுவதாக நோபல் குழு தெரிவித்துள்ளது.

இவ்வருட நோபல் சமாதான பரிசுக்காக 199 பேரின் பெயர்கள் முன்மொழியப்பட்டிருந்தது. 2003, 2004 ஆம் ஆண்டுகளில் நோபல் சமாதான பரிசு அறிவிக்கப்படுவதற்கு முன்னரேயே தகவல் வெளிவந்ததையடுத்து இம்முறை மிகவும் இரகசியமாக நோபல் சமாதானப் பரிசுக்குரியவர் தெரிவுசெய்யப்பட்டாரென்பது குறிப்பிடத்தக்கது.

## தேர்தலில்....

நிலைமையை சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைமை விளங்கிக்கொள்ளுமென நான் நினைக்கின்றேன். எனவே, எமது முன்மொழிவை அவர்கள் சாதகமாக பரிசீலிப்பார்கள் எனவும் நான் நினைக்கின்றேன்.

அரசியல் ஸ்திரத்தன்மை, பொருளாதார அபிவிருத்தி என்பவற்றை ஏற்படுத்துவதுடன், சமாதானம் மற்றும் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த அனைத்து அரசியல் தலைவர்களும் ஒன்றிணைந்து பாடுபடவேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

## அரசுக்கு...

புலிகளும் நேரடியாக உடனடியாகச் சந் தித்துப் பேசும் சாத்தியமில்லை.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் முன்னாள் தலைவர் ட்ரொன் புறூவ்ஹொவ்டே எட்டு நாள் விஜயமாக நாளைமறுதினம் கொழும்பு வரவுள்ளார். இவரது விஜயத்தின் மூலம் போர்நிறுத்த உடன்படிக்கையை உறுதியான முறையில் அமுல் செய்வதற்கான வாய்ப்பு உருவாகும்.

இதேவேளை - நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் அடுத்த மாதம் ஒஸ்லோவிற்கு செல்லவுள்ளார். அதற்கு முன்னர் இலங்கையின் சமாதான முயற்சிகளில் புதிய நோர்வே அரசாங்கம் ஈடுபடுவது குறித்து விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை அறிந்துகொள்ளவே ஹான்ஸ் பிரட்ஸ்கர் கிளிநொச்சிக்கு சென்றதாகவும் நோர்வே தூதரக பெண் பேச்சாளர் ஜெர்ஸ்ரி றொம்ஸ்டால் தெரிவித்தார்.

# தமிழர் தாயகப் பகுதிகளில் சர்வதேச சூழல் பாதுகாப்பு நிகழ்வு!

சர்வதேச சூழல் நாள் நிகழ்வுகள் தமிழர் தாயகத்தில் தமிழீழ சூழல் நல்லாட்சி ஆணையகத்தினால் நேற்று சிறப்பாக நடத்தப்பட்டன.

அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய தமிழர் தாயக மாவட்டங்களில் இந்த நிகழ்வுகள் நடத்தப்பட்டன.

கிளிநொச்சியில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், கிளிநொச்சி அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனை, அரச செயலகம், பாடசாலைகள் மற்றும் பொது நிறுவனங்கள் ஆகியவற்றில் சூழல் நாளையொட்டி துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

தமிழீழ விடுதலைப்புலிகளின் பாசறைகள், அலுவலகங்கள் என்பவற்றிலும் போராளிகளும், மக்களும் சூழலைபேணும் செயற்பாட்டில் ஈடுபட்டனர்.

போர்நிறுத்த உடன்பாடு ஏற்பட்ட பின்னர் நிலவிவரும் அமைதிச் சூழ்நிலையில், தென்னிலங்கையில் இருந்து பெருமளவு சூழலைப் பாதிக்கும் பொருட்கள் கிளிநொச்சியை வந்தடைவதால் அதனால் ஏற்படும் சூழல் பாதிப்புகளை கருத்திற்கொண்டு - தமிழீழ சூழல் நல்லாட்சி ஆணையகம் சர்வதேச சூழல் நாளாகிய நேற்று சூழலைப் பேணும் நடவடிக்கையில் இறங்கியது.

இப்பணியில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தமது தொண்டர்கள் மூலமாக தமது முழுமையான வளத்தைப் பயன்படுத்தி சூழலைப் பேணும் நடவடிக்கையில் ஈடுபட்டது.

அத்துடன், தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நேற்று முதல் எதிர்வரும் 13 ஆம் திகதிவரை சூழல் பாதுகாப்பு முன்னோடி வாரத்தினை கடைப்பிடித்து வருகிறது.

இதேவேளை, போராளிகளும், மக்களும் இணைந்து சூழலைப் பேணும் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# துப்பாக்கி தவறுதலாக வெடித்து கடற்படை சிப்பாய், பொதுமகன் காயம்!

திருகோணமலை

திருகோணமலை சிவன் கோவிலடியில் உள்ள காவலரணில் கடமையிலிருந்த கடற்படைச் சிப்பாயின் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் அவரும் பொதுமகனொருவரும் காயமடைந்ததாக படைத்தலைமையகம் தெரிவித்துள்ளது.

கடற்படையைச் சேர்ந்த ரீ.எம்.டி.யூ புஷ்பகுமாரவும், பொதுமகன் பலதேவதாஸ் (வயது 33) என்பவருமே காயமடைந்தவர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தவறுதலான துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றவேளை, குறித்த பொதுமகன் அவ்வழியால் சென்றதாலேயே இவருக்கு காயம் ஏற்பட்டது. இவர் திருகோணமலை பொது வைத்தியசாலையிலும், கடற்படைச்சிப்பாய் கடற்படையினரின் வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# மரண அறிவித்தல்கள்

## கிட்டினன் நவரட்ணம்

நெல்லியடி மகாத்மா வீதியைச் சேர்ந்த கிட்டினன் நவரட்ணம் நேற்று காலமானார். அன்னாரின் தகனக் கிரியைகள் ஆலங்கட்டை மயானத்தில் இன்று பிற்பகல் 1 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மகாத்மா வீதி,
நெல்லியடி.

தகவல்: ராஜன்
(மகன்) - 0776161343

## திருமதி சின்னத்தம்பி அன்னம்மா

அராலி வடக்கைப் பிறப்பிடமாகவும், அளவெட்டி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்தம்பி அன்னம்மா அவர்கள் 06.10.2005 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கந்தையா மற்றும் தங்கம், நாகலிங்கம், அருணாசலம், பூரணம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், நேசமணி, காலஞ்சென்ற மகாதேவன், கந்தசாமி (கனடா), தங்கராசா (சுவிஸ்), தேவராசா (கனடா), அருந்தவமணி ஆகியோரின் பாசமிகு தாயாரும், குணசேகரம் (முன்னாள் மின்முகாரி, காங்கேசன்துறை சீமெந்து கூட்டுத்தாபனம்), தேவி (கனடா), ரூபி (கனடா), சாந்தினி (கனடா), கலா (சுவிஸ்), பிறேமன் (துபாலதிபர் யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் இன்று (08.10.2005) மதியம் 12 மணிக்கு தகனக்கிரியைக்காக கொட்டுப்பனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.


அளவெட்டி தெற்கு,
அளவெட்டி.

தகவல்:
சி.குணசேகரம்
(மருமகன்)

(2081)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 08.10.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# மின்சார கட்டணத்தை நேரடியாக காசோலை மூலம் செலுத்தலாம்



யாழ்ப்பாணம் —
மின் பாவனையாளர்கள் தமது மாதாந்த மின்சாரக் கட்டணங்களை நேரடியாக கே.கே.எஸ். வீதியில் உள்ள இலங்கை மின்சார சபையின் வட பிரதேச காரியாலயத்தில் காசோலை மூலம் செலுத்தலாம் என, இலங்கை மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ்வாறு பாவனையாளர்கள் நேரடியாகத் தமது கட்டணங்களைச் செலுத்துவதன் மூலம், குறித்த நாளன்றே அவர்களது கட்டணம் கணக்கில் சேர்த்து அந்தந்த மாதத்தினுடைய கட்டணங்கள் கழிக்கப்படும். இந்த நடைமுறை கடந்த 19 ஆம் திகதியிலிருந்து மின்சார சபையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நேரடியாக கட்டணம் செலுத்தும் இந்த நடைமுறைக்கென மின்சாரசபை கணினி மயப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் வங்கிகள் மற்றும் தபாலகங்களில் செலுத்தப்படும் கட்டணங்களும் நேரடியாக யாழ். பிரதேச காரியாலயத்துக்கே வந்து சேரும்.

அதேவேளை, தற்போது காசோலையாக மட்டும் பாவனையாளர்கள் நேரடியாகக் கட்டணம் செலுத்தமுடியும். விரைவில் பணமாகவும் கட்டணங்களைச் செலுத்த நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

## வாகனங்களை நிறுத்தவேண்டாமென கோரிக்கை

தென்மராட்சி —
சாவகச்சேரி பொதுச்சந்தையில் வர்த்தகநிலையங்களுக்கு முன்பு துவிச்சக்கரவண்டி, பார ஊர்திகள் போன்றவற்றை நிறுத்தி, பொது மக்களுக்கு இடையூறு ஏற்படுத்த வேண்டாம் எனவும், இவ்வாறு நிறுத்துவதன் மூலம் போக்குவரத்துக்குப் பல்வேறு நெருக்கடிகள் ஏற்படுவதாகவும், எனவே இவற்றைத் தவிர்த்து ஒத்துழைக்குமாறும் சாவகச்சேரி நகர சபை செயலாளர் திருமதி கு.ஆறுமுகம் கேட்டுள்ளார். (29)

# சிறப்பாக கொண்டாடப்பட்ட சர்வதேச ஆசிரியர் தினம்!

யாழ்ப்பாணம் —
யாழ்.மாவட்டத்தில் நேற்று முன்தினம் ஆசிரியர் தினம் மிகவும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. பாடசாலைகளிலும், கல்வி நிலையங்களிலும் ஆசிரியர்களும், அதிபர்களும், பெற்றோர்களாலும் மாணவர்களாலும் கௌரவிக்கப்பட்டனர்.

யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து பாடசாலைகளிலும் நேற்றுமுன்தினம் காலை ஆசிரியர்கள் மலர்மாலை அணிவித்தும், அன்பளிப்புப்பொருட்கள் வழங்கியும் கௌரவிக்கப்பட்டனர்.

இதேவேளை, வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள 24 கல்வி வலயங்களிலும் தெரிவு செய்யப்பட்ட 180 சிறந்த ஆசிரியர்கள் நேற்று முன்தினம் திருகோணமலையில் கௌரவிக்கப்பட்டனர்.

ஆசிரிய கௌரவிப்பு நிகழ்வுகள் ஏனைய மாவட்டங்களிலும் வெகு சிறப்பாக நடைபெற்றன.

இதேவேளை, சர்வதேச ஆசிரியர் தினமான நேற்றுமுன்தினம் தேசியரீதியில் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் 26 கோரிக்கைகளை முன்வைத்து சுகயீன லீவுப் போராட்டத்தில் ஈடுபட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# மானிப்பாய் ஆலயத்தில் மனித எலும்பு எச்சங்கள்!

யாழ்ப்பாணம் —
மானிப்பாயில் உள்ள ஆலயம் ஒன்றின் வளவில் இருந்து மனித எலும்புக்கூட்டு எச்சங்கள் மீட்கப்பட்டதாகத் தெரியவருகின்றது. சில நாட்களுக்கு முன்னர் மேற்படி ஆலயத்தில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுவரும் நிலையில் குழியொன்றை வெட்டிய போதே இந்த மனித எலும்பு எச்சங்கள் மீட்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

இதேவேளை, இந்த விடயம் தொடர்பாக மானிப்பாய் பொலிஸாரிடம் கேட்டபோது இதுபற்றிய தகவல் எதுவும் தமக்கு கிடைக்கவில்லை எனத் தெரிவித்தனர்.

# சுன்னாகம் பிரதேசசபையின் பொது அறிவுப்போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம் —
உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு சுன்னாகம் பிரதேச சபையால் நடத்தப்பட்ட திறந்த பொது அறிவுப் போட்டியில் வெற்றி பெற்றோர் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

முதலாமிடம் - த.கீர்த்திகா (கந்தரோடை), இரண்டாம் இடம்- த.சஞ்சயன் (கந்தரோடை), மூன்றாமிடம் - ந.தர்சினி (இணுவில்).

ஆறுதல் பரிசு பெற்றோர் விபரம் -

த.அறிவரசி (மயிலணி வடக்கு) - மோ.கோபிகா (சுன்னாகம்), வே.மாணிக்கம் (மயிலிட்டி வடக்கு), ச.சக்திபால சர்மா (உடுவில்), சி. செல்வறெக்சன் (சுன்னாகம்), ச.சக்திதர்ஷினி (உடுவில்), மோ.கோபிராஜ் (சுன்னாகம்), ச.சக்திதாஜினி (உடுவில்), நா.நிரோஜன் (மருதனார்மடம்), ச.யோகாம்பிகை (உடுவில்).

உள்ளூராட்சி வார இறுதி நிகழ்வின் போது இவர்களுக்கான பரிசளிப்பு இடம்பெறுமென பிரதேச்சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (101)

## சிறுவர் இல்லங்களிலுள்ள

# பிள்ளைகளை பெற்றோரிடமோ அல்லது இரத்த உறவுகளிடமோ ஒப்படைக்கவும்

யாழ்ப்பாணம் —
சிறுவர் பாதுகாப்பு இல்லங்களில் உள்ள சிறுவர்களை அவர்களின் பெற்றோரிடமோ அல்லது இரத்த உறவினர்களிடமோ ஒப்படைக்கப்படுவது தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று, நேற்று முன்தினம் யாழ். நீதிமன்றத்தில் நீதிபதி ஆர்.ரி. விக்னராஜா தலைமையில் நடைபெற்றது.

புதிய சட்ட நடைமுறைக்கு அமைவாக சிறுவர்கள் அவர்களின் பெற்றோரின் அல்லது இரத்த உறவினர்களின் பாதுகாப்பில் இருப்பதன் மூலம் பூரண வளர்ச்சியை அடைய முடியும். இதற்கமைய, யாழ். குடாநாட்டில் உள்ள சிறுவர் பாதுகாப்பு இல்லங்களில் உள்ள சிறுவர்களை அவர்களது பெற்றோரிடமோ அல்லது இரத்த உறவினர்களிடமோ ஒப்படைக்கப்படுவதுடன், மேற்படி குடும்பங்களில் வருமானம் குறைவான குடும்பங்களாகக் காணப்படுமாயின் அவர்களுக்கு வருமானத்தை ஈட்டிக்கொடுக்கும் வகையிலான செயற்பாடுகளை அரச சார்பற்ற நிறுவனங்கள் மேற்கொள்ளவுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விசேட கூட்டத்தில் யாழ்.மாவட்ட மேலதிக நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரம், சிறுவர் பாதுகாப்புக் குழுவினர், யாழ். மாவட்டத்திலுள்ள அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## துர்நாற்றம் வீசும் கழிவுப்பொருட்கள்

யாழ்ப்பாணம் —
கோம்பயன்மணல் மயானத்தை அண்டிய பகுதியில் துர்நாற்றம் வீசுவதால் அந்தப் பகுதியில் குடியிருப்போர், மற்றும் அந்த வீதியால் பயணம் செய்வோர் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாக அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கழிவுப் பொருட்கள் மற்றும் இறந்த கால்நடைகள், இறைச்சிக்காக வெட்டப்படும் விலங்குகளின் எச்சங்களை வீதியோரங்களில் வீசுவதால் துர்நாற்றம் வீசுகிறது. இதனைச் சம்பந்தப்பட்டவர்கள் உரிய முறையில் கவனத்தில் எடுக்கவேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

# உரிமைக்காக போராடும் தமிழரின் நிகழ்வுகளை பி.பி.சி செய்திச் சேவை இருட்டடிப்பு செய்கிறது!

## யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் கவலை

யாழ்ப்பாணம் —
தமிழர் தாயக நிகழ்வுகளை பி.பி.சி செய்திச் சேவை இருட்டடிப்புச் செய்கிறது.

இனிமேலாவது நடுநிலையுடன் செய்திகளை ஒலிபரப்புச் செய்யும்படி கோரி - யாழ். மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் பி.பி.சி செய்திச் சேவைக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளது.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

தமது வாழ்வு உரிமைக்காகப் போராடும் இனத்தின் பதிவுகளை சர்வதேச ஊடகங்கள் முக்கியத்துவப்படுத்தி, செய்திகளை வெளியிட்டு வரும் வேளையில் பி.பி.சி ஒலிபரப்பு நிறுவனம் தமிழர் தாயகத்தில் நடைபெறும் நிகழ்வுகளை இருட்டடிப்புச் செய்தும், வெளியிடாமலும், ஒரு பக்கச் சார்பாக நடந்து வருகின்றது. இது தமிழர்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தி வருகின்றது. இது குறித்து யாழ்ப்பாண மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவிக்கிறது.

இலங்கையில் வடக்கு -கிழக்கு பகுதி தமிழர்களின் தாயகமாகும். இங்கு அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள், விடுதலைக்கான போராட்ட நிகழ்வுகள், தமிழர்களின் உரிமைக் குரலான பொங்குதமிழ் நிகழ்வுகள் என ஏராளமான நிகழ்வுகள் நாளாந்தம் நடைபெற்று வருகின்றன. இது தொடர்பாக எந்த ஒரு செய்தியையும் பி.பி.சி வெளியிடவில்லை என்பது தெட்டத் தெளிவாக எமக்குத் தெரிகிறது.

தேமதுர தமிழோசை உலகமெல்லாம் பரவ வகை செய்தல் வேண்டும் என்ற குரல் முழக்கமிட்டு நிகழ்ச்சிகளை ஒலிபரப்பும் பி.பி.சி, அந்த தார்மீகப் பொறுப்பை மறந்து எமது மண்ணில் நடக்கும் நிகழ்ச்சிகளை ஒலிபரப்பாமல் புறக்கணித்து வருகின்றது. மெய்யான செய்திகளை மூடி மறைத்து பக்கச்சார்புடன் செய்திகளை வெளியிட்டு வருவது அண்மைக்காலமாக அதிகரித்துள்ளது.

கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக சிறீலங்கா ஆக்கிரமிப்புப் படைகளின் யுத்தத்தால் துன்பமான வாழ்வை சுமந்து நிற்கும் தமிழ் மக்களின் மெய்யான நிலைப்பாட்டை வெளியிட மறுத்து, பக்கச்சார்புடைய செய்தி நிறுவனமாக மாறிவிட்டதா? என எம்மைச் சந்தேகம் கொள்ள வைக்கிறது. இது தொடருமானால் பி.பி.சி அதன் தனித்துவத்தை இழந்து போக நேரிடும். இனிவரும் காலத்திலாவது நடுநிலைமையுடன் நடந்து கொண்டு, தமிழர் தாயகத்தில் நடைபெறும் நிகழ்வுகளை ஒலிபரப்புச் செய்து உதவுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம் என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



சொண்ட் நிறுவனத்தின் அனுசரணையுடன் அல்லையம்பதி ஸ்ரீ முருகன் சிறுவர் கழக சிறுவர்தின நிகழ்வுகளை அல்லையம்பதி முருகன் ஆலய பிரதமகுரு ராம் சபாநாதக் குருக்கள் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதைக் காணலாம்.



யோகி மனையியல் அக்கடமியில் கேக் அலங்காரக் கண்காட்சி - கடந்த 5 ஆம் திகதி நல்லூர் அம்மன் வீதியில் உள்ள பயிற்சியகத்தில் நடத்தப்பட்டது.

இந்தக் கண்காட்சியை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தார். பயிற்சி மாணவிகளால் உருவாக் கப்பட்ட திருமண கேக், பிறந்த தினக் கேக் மற்றும் ஏனைய வைபவங்களுக்குமான பல்வேறு வகையான கேக் வகைகள் கண்காட்சிக்காக வைக்கப்பட்டிருந்தன.

விரயமாகும் பொருட்களை மீள மூலதனமாக்குவோம்
REERDO

# புனித பூமி சிறுவர் இல்லத்தின் 13 ஆம் ஆண்டு நிறைவுவிழா

பூநகரி—

போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் எதிர்கால நலன் கருதி தேசியத் தலைவரின் திட்டமிடலுக்கு ஏற்ப, மாவீரர் லெப்ரினன்ட் கேணல் அன்பு னம்பலம் ஞாபகார்த்த வைத்தியசாலையில் புணிபுரியும் வைத்திய கலாநிதி பாலன் ஏற்றிவைத்தார்.

அதனைத் தொடர்ந்து தமிழர் புனர்வாழ்வுக் கழகக் கொடி களின் அபிவிருத்திக்கும், புனரமைப்புக்குமான உதவிப் பணிப்பாளர் சிவா, கல்வித் தொழிற் கல்வி சிறுவர் இல்ல இயக்குநர் அஞ்சனா, காந்தி நிலைய இயக்குநர் கரிகரன் ஆகியோர் அணி




அவர்களால் அமைக்கப்பட்டு, தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் நிர்வகிக்கப்பட்டு வரும் புனித பூமி சிறுவர் இல்ல 13 ஆம் ஆண்டு நிறைவு விழா நிகழ்வு, கடந்த புதன்கிழமை மாலை 4.00 மணியளவில் மேற்படி சிறுவர் இல்ல வளாகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச் சுடரை சிறுவர் இல்லங்களின் புனரமைப்புக்கும், அபிவிருத்திக்குமான நிறுவக இணைப்பாளர் ரவி, கராத்தே ஆசிரியர் வள்ளுவன் ஆகியோர் ஏற்றி வைத்தனர். தமிழீழத் தேசியக் கொடியை வைத்தியர் பொன் யைக் குருகுல சிறுவர் இல்ல இயக்குநர் கிரிஜா ஏற்றிவைத்தார். புனித பூமி சிறுவர் இல்லக் கொடியை மாணவர் அருள் குமார் ஏற்றிவைத்தார்.

பூநகரி இராணுவக் கூட்டுப் படைத்தளம் மீதான தாக்குதலின்போது வீரச்சாவடைந்த லெப்ரினன்ட் கேணல் அன்புவின் திருவுருவப்படத்துக்கான ஈகைச் சுடரைத் தமிழர் புனர்வாழ்வுக் கழக முல்லைத்தீவு மாவட்டப் பணிப்பாளர் மூர்த்தி, தமிழர் புனர்வாழ்வுக் கழக செய்திப் பிரிவைச் சேர்ந்த சங்கீதன் ஆகியோர் ஏற்றிவைத்தனர். மலர் மாலையை சிறுவர் இல்லங் வித்தனர். தொடர்ந்து சிறுவர் இல்ல மாணவர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் ஆகியோர் வணக்கம் செலுத்தினர்.

இந்த நிகழ்வில்- வரவேற்புரையை புனிதபூமி சிறுவர் இல்ல இணைப்பாளர் குருபரன் நிகழ்த்தினார். தலைமையுரையை புனிதபூமி சிறுவர் இல்ல மாணவன் கோடீஸ்வரன் நிகழ்த்தினார். சிறப்புரையை வைத்திய கலாநிதி பாலன் நிகழ்த்தினார்.

இதன்போது கலைநிகழ்வுகளும், பரிசில் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## நல்லொழுக்க தினநிகழ்வுகள்

இராமநாதபுரம்—

கிளிநொச்சி இராமநாதபுரம் மகாவித்தியாலத்தில் சர்வதேச நல்லொழுக்க தின நிகழ்வுகள் கடந்த புதன்கிழமை பாடசாலை உப அதிபர் இ.திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மது விலக்கு, சூழல் பாதுகாப்பு போன்ற தலைப்புகளின் கீழ் பயிற்சிப்பட்டறைகள் நடைபெற்றன.

அத்துடன் பேச்சு, கட்டுரை, கவிதை ஆகிய துறைகளில் போட்டிகள் நடைபெற்றன. (இ)

## உணவுப் பொருட்கள் கிடைக்கவில்லை என உணவு திட்ட பிரதிநிதிகளிடம் அதிபர்கள் முறைப்பாடு

ஆழியவளை—

மருதங்கேணிக் கோட்டப் பாடசாலைகளில் மாணவர்களுக்குக் காலை உணவை வழங்குவதில் பாடசாலை நிர்வாகம் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உலக உணவுத் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் உணவுப் பொருட்கள் சீரான முறையில் பாடசாலைகளுக்கு கிடைப்பதில்லை எனப் பாடசாலை அதிபர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதன் காரணமாகப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிடம் கடனாகப் பெற்றே, பாடசாலை மாணவர்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டு வருகிறது.

எனவே இந்த நிலைமையை சீர் செய்யுமாறு பாடசாலை அதிபர்கள் உலக உணவுத்திட்ட பிரதிநிதிகளிடம் முறையிட்டுள்ளனர். (122)

## வட்டக்கச்சி பிரதேசத்துக்கு மின்சாரம் வழங்க நடவடிக்கை

இராமநாதபுரம்—

கிளிநொச்சியிலிருந்து வட்டக்கச்சி பிரதேசத்துக்கு மின்சாரம் வழங்கும் நடவடிக்கை மின்சார சபையினரால் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கையாக வீதியோரங்களில் மின்கம்பங்கள் பறிக்கப்பட்டுள்ளன.

நீண்டகால இடைவெளியின் பின்னர் மீண்டும் இந்தப் பிரசேதத்துக்கு மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (இ)

## சர்வதேச ஆசிரியர் தினத்தை முன்னிட்டு முன்பள்ளி ஆசிரியர்கள் கௌரவிப்பு

கிளிநொச்சி—

கிளிநொச்சி மேஜர் முரளி முன்பள்ளி ஆசிரியர்கள் கௌரவிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஆரம்பக் கல்வியின் உதவிக்கல்விப் பணிப்பாளர் கணேசலிங்கம் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ அரசியல் துறைத் துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றிவைத்தார். முன்பள்ளிக் கொடியை முதன்மை ஆசிரியை ரேவதி ஏற்றிவைத்தார்.

முன்பள்ளிச் சிறார்களால் ஆசிரியர்கள் மலர்மாலை அணிவித்து கௌரவிக்கப்ப ட்டனர். அத்துடன் முன்பள்ளிச் சிறார்களால் ஆசிரியர் பணி போற்றும் நிகழ்வுகளும் நடத்தப்பட்டன. முன்பள்ளி ஆசிரியர்களை கௌரவிக்கும் வகையில் பெற்றோர்களால் வழங்கப்பட்ட நினைவுப் பரிசுகளை அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் தங்கன் வழங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் சி.நளன் மற்றும் மாணவர் அமைப்பைச் சேர்ந்த பாரிமகன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## கடற்புலிகளின் படகுகள் தொடர்ந்து நடமாட்டம்

முல்லைத்தீவு—

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் கடந்த புதன்கிழமை இரண்டாவது நாளாகவும், கடற்புலிகளின் படகுகள் அணி ஒன்றின் நடமாட்டம் காணப்பட்டதாகக் கடற்படையினர் தெரிவித்தனர்.

கடந்த புதன்கிழமை காலை 9.30 மணியளவில் ஏழு அதிவேகத் தாக்குதல் படகுகள் கொண்ட அணியொன்று, சந்தேகத்துக்கிடமாக நடமாடியதாகவும் கடற்படையினர் தெரிவித்தனர்.

கடந்த திங்களிலும் கடற்புலிகளின் ஆறு அதிவேகப் படகுகள் இந்தப் பகுதிகளில் நடமாடியதாகப் படைத்தரப்புத் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழீழ சுற்றுச் சூழல் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சியில் கழிவுப்பொருட்கள் அகற்றல்

கிளிநொச்சி—

தமிழீழ சுற்றுச்சூழல் நல்லாட்சி ஆணையகத்தினரின் ஏற்பாட்டில் ஒக்டோபர் 07 தொடக்கம் 13ஆம் திகதிவரை சுற்றுச்சூழல் பாதுகாப்பு வார த்தை முன்னிட்டு கிளிநொச்சி நகரம் தூய்மையடைந்துள்ளது.

உலக சுற்றுச்சூழல் நாளை முன்னிட்டு கிளிநொச்சி மாநகரில் உள்ள கழிவுப் பொருட்கள் அனைத்தையும் கிளிநொச்சி மாநகரைச் சேர்ந்த அரச, அரசசார்பற்ற உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவ ர்கள், வணிக சங்கத்தினர் மற்றும் பொதுமக்கள் என அனைவரும் ஒன்று திரண்டு சுற்றுச் சூழலில் உள்ள கழிவுப்பொருட்களை கனரக வாகனங்களின் உதவியுடன் அகற்றி வருகின்றனர்.

பொலித்தீன் போன்ற திண்மக் கழிவுப் பொருட்களினால் சூழிலின் இயற்கை பாதிக்கப்பட்டு, இயற்கை மாற்றத்தினால் அழிவுகள் ஏற்படுகின்றன. எனவே இந்தச் சுற்றுச்சூழலின் இயற்கைத் தன்மையைப் பாதுகாக்கும் நோக்குடனேயே இந்தச் செயற்பாட்டினை மேற்கொண்டு வருகின்றனர்.

## காலச் சுவட்டில்...

### இன்றைய நாளில் அன்று நிகழ்ந்தவை

**ஒக்ரோபர்-08**

1778: முதன் முதலாக கையுறை, அணிந்து கொண்டு பிரிட்டனில் குத்துச் சண்டை நடைபெற்றது.

1870: பிரிட்டனில் கடற்கண்ணியின் செயல்திறன் நடைமுறையில் செய்து காட்டப்பட்டது.

1871: சிக்காக்கோவில் பெரிய தீ விபத்து ஏற்பட்டது. 17450 வீடுகள் எரிந்து சாம்பராகின. 98000 பேர் வீடிழந்தனர். 300 பேரிலும் அதிகமானவர்கள் பலியாகினர்.

1877: கனெக்டிகட்டில் ஹார்ட்போர்ட் தொலைபேசி தொடர்பகத்தில் உடனடி தொலைபேசி இணைப்பு ஏற்படுத்தித் தரப்படும் என்று விளம்பரம் வெளியிடப்பட்டிருந்தது.

1881: இந்தோனேசியாவில் ஏற்பட்ட கடும்புயல், கடல் கொந்தளிப்பால் மூன்று லட்சம் பேர்கள் உயிரிழந்தனர்.

1906: முடி அலங்காரத்தில், முடியை நிரந்தரமாக சுருள் சுருளாக வைத்திருக்கச் செய்யக்கூடிய இயந்திரம் ஒன்றை முடி ஒப்பனையாளர் ஒருவர் அறிமுகப்படுத்தினார்.

1914: குறித்த இலக்கு நோக்கி குண்டு வீசித் தாக்கியழிக்கும் தாக்குதல் நடவடிக்கைகளை பிரிட்டிஷ் விமானங்கள் முதன்முதலாக கொலக்னி என்ற இடத்தில் நடத்தியது.

1918: ஜேர்மனி அனுப்பிய போர் நிறுத்தம் தொடர்பான கடிதத்துக்கு, ஆக்கிரமித்த பகுதிகளில் இருந்து ஜேர்மனி விலகிய பிறகுதான் சமாதானப் பேச்சு என்ற பேச்சே எடுக்கப்படவேண்டும் என்று, அமெரிக்க அதிபர் உட்ரோ வில்சன் பதில் கடிதம் அனுப்பினார்.

1921: அந்நியத் துணிவகைகளை காந்தி பம்பாய் நகரில் தீ வைத்துக் கொளுத்தினார்.

1924: இந்தியாவில் இந்து-முஸ்லிம் ஒற்றுமைக்காக மகாத்மா காந்தி மேற்கொண்ட 21 நாள் உண்ணாவிரதம் முடிவுக்கு வந்தது.

1929: முதன்முதலாக தன்னியக்க விமானம் ஒட்டுக் கருவி பொருத்தப்பட்ட விமானம் வெள்ளோட்டம் விடப்பட்டது.

1932: இந்திய விமானப்படை ஆரம்பிக்கப்பட்டது.

1938: செக்கோஸ்லேவேகியாவின் ஒரு பகுதிக்கு சுயாட்சி வழங்கப்பட்டு, அந்தப் பகுதியின் பெயர் "கார்ப்பதோ உக்ரைன்" என்று குறிப்பிடப்பட்டது.

1939: மேற்கு போலந்தை தனது நாட்டின் ஒரு பகுதியாக ஜேர்மனி இணைத்துக் கொண்டது.

1957: பிரிட்டனின் விண்ட்ஸ்கேல் என்னுமிடத்திலுள்ள அணுசக்தி ஆலையில் தீப்பிடித்து, தீ புளூட்டோனிய அணு உலையைச் சூழ்ந்து கொண்டது. மிகப்பெரிய அணு விபத்தாக மாறுமுன் 11ஆம் திகதி காலையில் தீ அணைக்கப்பட்டது. தீ முழுமையாக அணைக்கப்படும் வரை அரசு இது பற்றி மக்களுக்குத் தெரியப்படுத்தவே இல்லை.

1958: பாகிஸ்தானில் முதன்முதலாக இராணுவப் புரட்சி நடந்தது. அயூப்கான் ஆட்சியைக் கைப்பற்றினார்.

1962: வடகொரியாவில் பொதுத் தேர்தல் நடைபெற்றது. நூறு சதவீத வாக்குப் பதிவு நடைபெற்றதாக அறிவிக்கப்பட்டது. அத்தனை வாக்குகளும் கம்யூனிஸ்ட் கட்சிக்கே செலுத்தப்பட்டிருந்தது.

1967: பொலிவியாவில் புரட்சி வீரர் ஏர்னஸ்ட் சே.குவேராவின் கெரில்லாப் படைகளுக்கும், பொலிவியா படைகளுக்கும் நடந்த போரில் சே.குவேரா பலியானார்.

1967: வாகன ஓட்டிகள் குடித்திருக்கிறார்களா என்பதைக் கண்டறிய சுவாசத்தை சோதித்தறியும் முறை பிரிட்டனில் முதன்முதலாக அறிமுகப்படுத்தப்பட்டது.

1973: சட்டபூர்வமான முதலாவது வர்த்தக வானொலி நிலையம் லண்டன் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் என்ற பெயரில் ஒலிபரப்பை ஆரம்பித்தது.

1987: வரலாற்றுப் புகழ் பெற்ற நடுத்தர அணு ஆயுத ஒழிப்பு உடன்படிக்கையில் அமெரிக்க ஜனாதிபதி ரீகனும், ரஷ்ய அதிபர் கோர்பச்சேவும் ஒப்பமிட்டனர்.

1993: தென்னாபிரிக்கா மீது விதித்திருந்த தடையை ஐக்கிய நாடுகள் சபை நீக்கியது.

தொகுப்பு- சந்துரு

## சூழல் நல்லாட்சிக்கான மாணவர் படையணி அமைப்பு

ஆழியவளை—

சூழல் நல்லாட்சிக்கான மாணவர் படையணிகள் பாடசாலைகளில் அமைக்கப்பட்டு வருகின்றன.

தாயகச் சூழலின் பேண்தகு நிலையினை உறுதிப்படுத்துவதற்கான சுற்றாடல் உணர்வுள்ள நட்புறவு கொண்ட தலைமுறையினரை உருவாக்கும் இலக்குடனேயே இந் தப் படையணிகள் உருவாக்கப்படுகின்றன.

மாணவர்கள் கல்வி கற்கும் வகுப்புக்களை அடிப்படையாகக் கொண்டு, மாணவர படையணி அமைக்கப்படுகிறது.

ஒரு பாடசாலையில் ஆகக் கூடுதலாக நான்கு படையணிகள் அமையும். தரம் 01 முதல் 05 வரை படையணி ஒன்று, தரம் 06 முதல் 08 வரை படையணி இரண்டு, தரம் 09 முதல் 11 வரை படையணி மூன்று, தரம் 12 முதல் 13 வரை படையணி நான்கு எனவும் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

ஒவ்வொரு படையணியும் 20 அங்கத்தவர்களைக் கொண்டதாக அமையும். (122)